# மருதம்

## பொங்கல் மலர்
## 2006



**திறந்த பல்கலைக்கழகம் - இலங்கை**
**The Open University of Sri Lanka**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*Exclusive 22kt Gold*

# FUWARD

GEMS & JEWELLERS (PVT) LTD

296/B2 Galle Road, Wellawatta, Colombo - 6

Tel: 011-2362124, Fax: 011- 2362125





**AUTHORISED MONEY EXCHANGE**

ECD/IN/AUT/I/1239



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T KOBI

# சமர்ப்பணம்



மருதம் என்றொரு தமிழ் ஏட்டினை நாம்
பெருமையுடன் எடுத்துத் தருகிறோம்
அருமைத் துங்கக்கரிமுகத்தான் தன்னருளால்
எங்கனும் பொங்கல் மலர் விழாச் சிறக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எவன் தமிழன்

தமிழனை எதிர்க்கும் பீரங்கிக் குண்டு
சமையல் அறையின் முள்ளங்கித் தண்டு
தமிழைத் தமிழன் தாய் என்பதாலும்
தமிழ் பழித்தானை அவன் நாய் என்பதாலும்
- தமிழனை எதிர்க்கும்....

தமிழ்த்தாய் வாடத் தான் வாழ்வதென்பது
தமிழனால் சற்றும் பொறுக்க ஒவ்வாதது
தமிழைத் தமிழன் மறந்த தெப்போது
சாவதும் வாழ்வதும் தமிழுக்கே என்றோது
- தமிழனை எதிர்க்கும்....

மெத்தை வீடு கட்டிப் புலாற்சோறு
வழங்குவதல்ல அவன் வேண்டும் பேறு
முத்தமிழ் காத்துப் பகைவனை ஒருவாறு
முடிப்பது தான் முடிவாம் என்று கூறு
- தமிழனை எதிர்க்கும்....

ஒரு நாட்டு மொழியினை ஒழிப்பவன் எண்ணம்
ஒழிந்தது போகுமுன் ஏற்படும் எண்ணம்
பருந்து பறக்க வேண்டியது திண்ணம்
பறக்கா விட்டால் தெரியும் கைவண்ணம்
- தமிழனை எதிர்க்கும்....

பாரதிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்குங் காணோம்
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ. சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ்த்தாய் வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே!

ஏழ்கடல் வைப்பியினுந் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழிய வே!
எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழிய வே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையக மே!
தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நா டே!

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழி யே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THAI THIRUNAAL CULTURAL FESTIVAL 2006 - COMMITTEE MEMBERS




Seated Miss. N. Kumutha, Mr. V. Prashanth (Editor), Mr. J. kogularajan (Secretary) Mr. R. Kishon (President) Mr. M. Umabalan (Editor), Miss. K. Mobilashini

Standing Miss. S. Jeyamathy, Mr. M. Jegatheswarasharma, Mr. Jegavinothan, Mr. T. Nirojan, Mr. A. Justin, Mr. K. Prashath, Mr. B. Balajeganthan, Miss K. Tharaka

Absent Mr. S. G. Navajeev (Vice President), Mr. P. Gobinath (Vice Secretary) Mr. P. Nimalraj (Treasurer) Mr. N. Thilagarajah (Editor), Mr. K. A. J. Nishanthan, Mr. N. Ramanan, Mr. C. Yoganandharajah

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தைப்பொங்கல் கலாசார விழா

இலங்கை திறந்த பல்கலைக்கழக மாணவர்கள்
பெருமையுடன் அளிக்கும்

## தைப்பொங்கல் விழா

நிகழும் தாரண வருடம் தைமாதம் முதலாம் நாள்
(14-01-2006) சனிக்கிழமை மு.ப 9.32 மணியளவில்
பல்கலைக்கழக வளாக மண்டபம்-04.





**பிரதம விருந்தினர்**

**Honorable Uma Coomaraswamy**
பேராசிரியர், துணைவேந்தர்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம் நாவல.

**சிறப்பு விருந்தினர்கள்**


**Honorable Dr. G. Bandarage**
பீடாதிபதி
இயற்கை விஞ்ஞான பீடம்

**Honorable Prof. GIC. Gunawardena**
பீடாதிபதி
கல்வி பீடம்

**Honorable Eng. Cecil Fonseka**
பீடாதிபதி
பொறியியல் தொழில்நுட்ப பீடம்

**Honorable Prof. Sudatta Ranasinghe**
பீடாதிபதி
மானிடவியல், சமூகவிஞ்ஞான பீடம்

**கௌரவ விருந்தினர்**
**திருமதி சந்திரபவானி பரமசாமி** B.A. (Hons)
உதவி விரிவுரையாளர்
மொழியியல் பீடம்
களனிப் பல்கலைக்கழகம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| 9.32 | மௌன அஞ்சலி |
| 9.34 | வரவேற்புரை |
| 9.40 | தமிழ் தாய் வாழத்து |
| 9.45 | மங்கள விளக்கேற்றல் |
| 9.48 | பொங்கல் வைபவம் |
| 9.50 | தலைமையுரை |
| 9.55 | சிறப்பு விருந்தினர் உரை |
| 10.00 | மாணவர் சங்க தலைவர் உரை |
| 10.05 | தமிழ் கலாசார நிகழ்ச்சி |
| 10..30 | கவிதை |
| 10.35 | Orgain |
| 10.50 | கவிதை |
| 10.55 | நடனம் “சலங்கையில் சங்கமம்” |
| 11.15 | பூஜை |
| 11.45 | சிங்கள கலாசார நிகழ்ச்சி |
| 12.00 | பொங்கல் மலர் வெளியீடு |
| 12.45 | பட்டிமன்றம் |
| 1.15 | உங்களுடன் பத்து நிமிடங்கள் |
| 1.30 | வில்லுப்பாட்டு “உறங்காத உண்மை” |
| 2.00 | தேனிசை |
| 5.30 | நன்றியுரை |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதம்

ஆம் என் கண்ணிலே தெரியும் அந்தக் குழுமையான காட்சி. எங்கும் பச்சைப் பசேல் "அக்காட்சியை உங்கள் கண்முன்னும் கொண்டுவர இம்மலர் "மருதம்" என்ற பெயரில் மலர்கிறது. அதுவும் தைப்பொங்கல் கலாசார விழாவாக மலர்வது எத்துணைப் பொருத்தம். சங்ககால இலக்கியங்களில் நிலங்கள் குறிஞ்சி, பாலைஇ, முல்லை, மருதம், நெய்தல் என ஐந்தாக வகுக்கப்பட்டன. வயலும் வயல் சார்ந்த நிலமும் மருதம் எனப்பட்டது. வயல் ஆம் நெல், கரும்பு, இஞ்சி, மஞ்சள், சோளம் எங்கு பார்த்தாலும் ஒரே இன்பமான காட்சி, நீர்வளம் சிறந்த இந்நிலம் குறைந்த செலவில் நிறைந்த பயனைக் கொடுக்க வல்லது.மற்ற நான்கு நிலங்களைக் காட்டிலும் வளங்கொளிக்கும் நிலம் மருதம்.சங்ககாலத்தில் இந்நிலத்தோரே செல்வச் செழிப்புடன் வாழ்ந்தனர். உழவன் பொங்கல் விழாவிலே மழையையும் வெய்யிலையும் தரும் சூரியபகவானுக்கு நன்றி செலுத்த நாம் அச்சூரியபகவானுக்கும் உழவனுக்கும் நன்றி செலுத்த வேண்டும். உழவுத்தொழிலுக்கு வேண்டுவது நீர். நீரின்முக்கியத்துவம் பற்றி வள்ளுவன் கூறுவதைப் பார்ப்போம். திருக்குறளில் அறம், பொருள், இன்பம் என வகுத்து இம்மூன்றிற்கும் இன்றியமையாதது நீர் என்பதனால் முதலாம் அதிகாரம் கடவுள் வாழ்த்திற்குப் பின் வான்சிறப்பு என்றஅதிகாரம் வைத்தார்.

"விசும்பின் துளி வீழின் அல்லால் மற்று ஆங்கே
பசும்புல் தலை காண்பரிது."

என்று கூறுவதிலிருந்து நீரின் அருமை உணர்த்தப்படுகிறது. இயற்கையாகவே நீர்வளம் நிறைந்த மருதத்திலே உழவன் பாடுபட்டுப் பயன் பெறுகிறான். உ லகம் அவன் பின்னே நிற்கிறது.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்."

என உழவன் பெருமை உணர்த்தப்படுகிறத.

கம்பராமயணத்திலே பாயந்து வரும் சரயு ஆறு

"தாதுகு சோலை தோறும் சண்பகக்காடு தோறும்
போதவிழ் பொய்கை தோறும் புதமணல்தடங்கள் தோறும்
மாதவி வேலிப்பூக வனந்தோறும வயல்கள் தோறும்
ஒதிய உடம்பு தோறும் உயிரென உலாயதன்றே."

என குறிஞ்சி பாலை முல்லையூடாக வேகமாக உலா வந்த சரயு மருதநிலத்திலே அமைதியடைந்து பல கிளைகளாகி வாழைத்தோட்டங்கள் கருப்பந்தோட்டங்கள் கமுகஞ்சோலைகள் எல்லாம் வளம்படுத்தி மகிழ்கிறது. இந்நிலத்திற்கு உரிய ஒழுக்கமாக ஊடல் அமைகிறது. தலைவன் தலைவி ஊடல் பின் கூடலாக மாறும்.

இம்மலரின் முகப்பு அட்டைப்படம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரால் சுட்டிக்காட்டப்பட்ட தேன்பொந்து நிறைந்த வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கேதீச்சர ஆலயக் கோபுரத்தால் அழகு செய்யப்பட்டு தமிழர்கள் வாழ்விலே தமிழும் வளமும் பொங்கிவர நாமெல்லாம் எம் தாயகத்தைத் திரும்பிப் பார்க்க வைக்கிறது. நாமும் சுதந்திரமாக எமது மருதத்திலும் நெய்தலிலும் வண்டிச்சவாரி விடுவோம் என்ற நம்பிக்கை தருகிறது.

மருதநிலம் உழவனுடன் சம்பந்தப்பட்டது. உழவன் தைப்பொங்கலுடன் சம்பந்தமானவன். எமது பல்கலை வளாகமும்" "தைப்பிறந்தால் வழி பிறக்கும்" என்பது போலஎம்மிடமுள்ள ஊடல் நீக்கி எல்லோரும் கூடி இம்மருதத்தின் தைப்பொங்கல் கலாசார விழா மூலம் எமக்கும் இன்பம் ஏற்படும். வளங்கொழித்து தலைநிமிர்ந்து வாழ வழிபிறக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from
# Vice - Chancellor

It gives me great pleasure to give this message to the souvenir published on the occasion of thr Thai Pongal celebrations in 2006. It is heartening to note that students of different religions and languages have joined together as one family to continue one of the good traditions of this university.

Let me ponder a little on the significance of this Thain Pongal.

As the sun makes its overtures in the east, dispelling the darkness of night. Thai Pongal dawns giving a great sense of hope and wonder in mankind. The human kind believes that when the month of Thai (January) dawns times will be propitious. Man lives in the hope of achieving something more. Thai Pongal not only connotes this but also conveys to humanity the message of peace, unity and brotherhood for a better tomorrow.

There is no other festival as important as . Thai Pongal to the farmer who shares his happiness with nature. On this day when the sun enters the house of Capricom the former offers the first fruits of his harvest as thanksgiving to the Surya Bhagavan (the Sun) who in the form of rain and sunshine, land and manure, animals and implement gave him a bountiful harvest. Pongal or sweetened milk rice is cooked with the newly harvested grain.

There is a deep spiritual significance in the worship of the Sun, the harbinger of life and vitality, light and warmth. The Sun is described as the giver of light and life asking for nothing in return. Mother nature is continuously giving and making man's life easier.

May the festivities of . Thai Pongal usher in joy and cheer, hope and prosperity, knowledge and peace, dispelling the darkness of ignorance as we cook the Pongal raise our hands in worship to Surya Bhagavan.

I wish you all a happy Thai and Pongal and a Prosperous 2006.

**Professor Uma Coomaraswamy**
Vice Chancellor
January 3, 2006.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from
# Student Counsellor

It is my great pleasure to send this message o the THAI PONGAL cultural festival, 2006. This is another one of cultural event that the OUSL celebrates with a large participation of students and staff. An event like this wills undoubtedly strength your ties with fellow students in particular and with the OUSL community in general. Furthermore, a cultural event of this magnitude will enable you to improve you skills which may not be directly related to students but certainly is helpful to live in the society as a useful citizen. Let me also talce this opportunity to thank the organizing committee for their hard work in organizing the event in 2006.

**Dr.L.S.G.Liyanege**
Chief Student Counsellor



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message From
# Dean - Faculty Of Engineering Technology

It gives me great pleasure in issuing this message on the occasion of celebrating Thai Pongal Festival at the Open University of Sri Lanka.

I am pleased to note that the tradition of celebrating Thai Pongal Festival is continuing this year also by a new group of students. In addition to the religious significance, events such as this will make life more interesting and meaningful. They also enhance mutual understanding and goodwill among people belonging to different religions and cultures.

My best wishes for a successful Thai Pongal Festival this year too!

**Eng. Cecil Fonseka**
Dean
Faculty of Engineering Technology


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message of the
# Dean - Faculty Of Natural Sciences

Congratulations for organizing this event to commemorate the Thai Pongal – 2006. It is a continuation of the tradition the Open University has had. Participation in activities other than academic should be an integral part of the life of any undergraduate. It allows students to develop skills other than academic which are essential for a successful life.

Another important aspect is the sharing of cultural values with other fellow students which is vital in Sri Lankan context. Hope the understanding gained in such activities will make at least a small contribution in brining peace.

I wish you all success in this event and in your studies.

**Dr. G. Bandarage**
Dean/Natural Sciences
Dean's Office
Faculty of Education
01-01-2006


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Message form the
## Dean - Faculty Of Education

I am very much pleased to send this message to the annual souvenir to mark the Thaipongal Day celebrations, 2006. Thaipongal is the first important festival celebrated by the Hindus all over the world with the dawn of the New Year. It is predominantly a harvest festival essentially celebrated by the practicing farmers or agricultural workers.

In a sense, Pongal is a thanks-giving festival. People express their gratitude to the Dieties, Indran and sun and also the cattle for their contribution to successful harvest in the agricultural sector.

This has now evolved into a festival celebrated by every Hindu irrespective of what his/her occupation is.

It is usually said that the dawn of the monthe of 'Thamil Thai' in mid-Janurary, ushers in a period of peace, happiness and prosperity.

I wish and pray this comes true.

**Prof. GIC Gunawardena**

Dean/Education


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Message form the
## Dean - Faculty Of Humanities and Social Sciences

**Dear Students**

I have great pleasure in issuing this message on the occasion of the Thai Thiurnal Festival of the Open University of Sri Lanka.

According to the information available in the internet Pongal is a harvest Festival-the Tamil equivalent of Thanksgiving. Pongal also mark the end of the traditional farming season, giving farmers a break form their monotonous routine, Thai Pongal is significaln to Tamils all over the world because of many reasons.

Thai Pongal is probably the only festival that follows a solar calendar and is celebrated on the fourteenthe of January every year. As such, it has astronomical significance: it marks the beginning of Uttarayana. The Sun's movement northward for a six month period. In Hinduism, Uttarayana is considered auspicious, as opposed to Dakshinaayana, or the southern movement of the sun, Traditionally, all important events mong the Hindus are scheduled during this period.

It could be noted that these traditions are very similar to practices in other cultures and religions and therefore we must promote and respect religious harmony and ethnic differences within our society.

I also wish to stress that all those celebrating and commemorating Pongal even will not only remember but also re-live this festival of immense meaning and significance.

I wish you the very best for this sacred festival and your cilibration!

**Prof. Sudatta Ranasinghe**
Dean Faculty of Humanities and Social Sciences
Open University of Sri Lanka.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

இலங்கை திறந்த பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்களால் இவ்வருட தைத்திருநாள் விழாவையொட்டிக் கொண்டாடும் கலாசார விழாவிலே வெளியிடும் விழா மலருக்கு இவ் வாழ்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

தைப்பொங்கல், தமிழர்களின் தனிப்பெரும் திருநாள், இப்புவி வாழ் உயிரினங்கள் அனைத்தினதும் வாழக்கையின் ஆதாரமாக விளங்கும் சூரியனை, மேலான இறைவனாகக் கண்டு, அவனை வழிபடும் நன்னாளாக விளங்குவதே இத் தைத்திருநாள். தவிர, உழவர் பெருமக்கள், தங்கள் உழைப்பின் பயனாகிய நெல் மற்றும் தானியங்களின் அறுவடைக்குப் பின்னர் தங்களை வாழ்விக்கும் இறைவனுக்கு அவற்றைப் படைத்து நன்றி செலுத்தும் நன்னனாளாகவும் இத் தைத் திருநாள் விளங்குகிறது. எனவே இந்நாளை உழவர் திருநாள் எனவும் போற்றுவதுண்டு. தமது உழைப்பின் பயனாய் கண்ட அமோக விளைச்சால் அவர்களது வாழ்க்கை செழிப்புறுவதால் "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்ற பழமொழியும் தோன்றியது.

மனித வாழ்க்கையின் மேன்மையும், சிறப்பும், ஒருவரையொருவர் ஆதரித்து வாழ்வதில்தான் தங்கியுள்ளது. அன்பின் பரிமாற்றம் மகிழ்ச்சியையும், நிறைவையும் தருகிறது. தனித்து தனக்காக மட்டுமே வாழ்பவன் அன்பின் சுவையை அனுபவிக்கத் தெரியாது, இயந்திரமாக வாழ்ந்து மடிகிறான். அவன் முரண்பாடுகள் நிறைந்தவனாக, அமைதியற்று, துயரத்தில் உழலுவது நிச்சயம், எனவே நலமான, மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு, அன்புப் பரிமாற்றம் அவசியம். இந்த அன்புப் பரிமாற்றம் மனிதர்களுக்கு இடையே மட்டுமன்றி, மனிதருக்கும் இறைவனுக்குமிடையேயும் அமைய வேண்டும். அதற்கான வாய்ப்புகளில் ஒன்றுதான் சமய விழாக்கள். தைப்பொங்கல் தினத்தன்று நம்மை வாழ்விக்கும் சூரிய பகவானுக்கு நம் அன்பை வழிபாடாக்கி மகிழ்கிறோம்.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்களை ஏற்பாடு செய்துள்ள கலாசார விழா சிறப்புடன் அமைய வாழ்த்துகிறோம்.

சுவாமி ஆத்மகனானந்தா

சுவாமி ஆத்மகனானந்தா
20-12-2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MESSAGE FROM BUDDHIST PRIEST

It is with great pleasure that I issue this message on the occasion of the "Thaipongal' celebration of the Open University of Sri Lanka Colombo.

I understand that the Thaipongal festival organizing committee of the open University of Sri Lanka celebrate every year this festival with a variety of programs which include the release of a special souvenir.

Taipongal is one of the most important festivals celebrated by Hindus all over the world to thank God Sun and at is indeed a pleasure to see that at student and staff community of OUSL participate at this celebration and promote solidarity brother-hood and Harmony.

I take this opportunity to congratulate the organizers of the festival and wish the programme a success

Priest. Hanthungama Hemalaka Wickramasingha Ramaya Namara,
Nugegoda.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MESSAGE FROM THE STUDENT UNION

I thank every body as the president of the student council for letting me give the message for the Thai Pongal Festival.

I wish you all a peace, happy and a prosperous new year which has just born. As we are going for the year 2006, we have won the riots against privatisation of free education and the increase in the course fee's. I wish this year will also be a victorious for us.

I wish that this year will be a education year for all the students who took part in all the activities that took place with in the university like this, this year will also be successive for the social service. With you and me joining of together in the student council, I thank the organizing committee for arranging this cultural programme. I hope this Thai pongal fstival will be peaceful and happy as everybody would except. I pary that this cultural programme would be a great success- with all your blessings and hopes.

I wish you all the success in future.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைத்திருநாளில் உங்களுடன் சில நிமிடங்கள்

இனிய நண்பர்கள்,
உமக்கு எனது பொங்கல் வாழ்த்து
நன்றி நவிலும் உயர் குணத்தால் உயர்ந்து
நிற்கும் நாளாம் உழவர் திருநாளாம்
இங்கு நாவலை திறந்த பல்கலை வளாகத்தில்
ஓர் தசாப்தத்தை நிறைவு செய்த
பெருமையுடன் உங்கள் நண்பன்
பேசுகின்றேன், இனிய தமிழில்
பேசும் அவா கொண்டேன்.

தமிழ்மொழி போல் இனிதானது
எங்கும் காணோம் என்றே புகலும்
நீவிர் தமிழினை மறந்ததும் ஏனோ?
பிற மொழிகளைக் கலப்பதும் ஏனோ?
தமிழன் என்பதற்கே அச்சம் ஏனடா?
நாயும் பிழைக்குமோ இந்தப் பிழைப்பு?
சீச்சீ.. நம் முந்தையர் - சூரர்
பெயரை அழிப்போமா?

வீர மறவர் நாமன்றோ? இந்த
வீண் வாழ்க்கை வாழ்வதினி நன்றோ?
அல்லை, தமிழன் என்பதில் தனிப்பெருமை
கொள்வோம். தேமதுரத் தமிழோசை
எங்கும் பரவும் வகை செய்வோம்
என்றே எழுந்தனர் எம் முன்னோர்
பல்கலை வளாகத்தில் புதுயுகம்
படைத்தனர் அவர்கள் வழியில்

அன்று பாரதி சொன்னான் அன்னைவாக்கில்
புத்தம் புதிய கலைகள் - பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்,
மெத்த வளருது மேற்கே - அந்த
மேன்மைக்கலைகள் தமிழினில் இல்லை
சொல்லவும் கூடுவதில்லை - அவை
சொல்லும் திறமை தமிழ் மொழிக்கில்லை
மெல்லத் தமிழினிச்சாகும் - அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்

என்றந்தப் பேதை உரைத்தான் - ஆ!
இந்த வசையெனக் கெய்திடலாமோ?
சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு
சேர்ப்பீர்! ஆமாம் அவளின் பெருமை
உலகறியச் செய்வோம் - எட்டுத்
திக்கிலும் தீந்தமிழ் இனிமை
யாவர் செவியிலும் பாய்ந்திடச்
செய்வோம். கலைச்செல்வங்கள்
தொழிநுட்பங்கள் இன்னும் எதற்கும்
குறைவு வரா அவளிற்கு - ஈழத்தமிழர்
நாம் எம்மொழிக்கிணை ஏதுமில்லை
என்று பறைசாற்றிட பெருமையுடன்
இங்கும் புதிய தசாப்தம்
படைக்கின்றோம்... இனியும்...
என்றும் உங்கள் துணையுடன்,

முன்னே பகர்ந்திட்ட நன்றி
அந்த பகலவனிற்கு அன்றோ
இந்த இனிய பொங்கலும்
அச்சான "மருதம்" மலரவும்
தோள்நின்ற நண்பர்கள், அன்பர்கள்
பலருக்கும் அடியேனின்
நன்றிகள்; புகழ் ஏறிப் புவிமிசை
என்றும் இருக்கும் தமிழ்த்தாயின்
பெயரால் பகர்கின்றேன்

தலைவர்
இ.கிஷோன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best Compliments From*

# HABROW Systems

IT providers

Total IT Providers

**Importers & Wholesale Dealers of Computers & Accessories**
**Service & Maintenance, Networking & VOIP Services**

## HABROW e view center

## NET CAFE

**Internet Surfing**

Net2Phone
Habrow VOIP

1 Hour 30/=

1 min 3/=

| | |
|---|---|
| Laser Print Out - 7/= | CD Writing - 30/= |
| Colour Print Out - 30/= | Scanning - 20/= |
| Audio & MP3 CD - 100/= | Software CD - 60/= |

**385 ½, Galle Road, Wellawatte, Colombo 06**

First Floor, Opposite **NDB** Bank - **Tel. 011 2364222 / 011 4528165**

# கணிதம் பயிற்சி நூல்

**தரம் 11,10,9,8,7,6** ஆசிரியர் **எஸ்.திலீபன்**

தொடர்பு

எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்

| | | |
|---|---|---|
| 385 ½, Galle Road | 125A, New moor Street | A/4, Soysapura, |
| Colombo - 06. | Colombo - 12. | Moratuwa. |
| Tel:2364222/4528165 | Tel:2433874 | Tel:2632777 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from*

## SUBJECTS

Tamil
Religion
English
Maths
Science
Commerce
Social Studies
Health Science

Spoken English
Spoken Sinhalam
Gr 1 -5 Morning Classes
Scholarship
Musical
Physics
Chemistry

Biology
Com.Maths
Economics
Accounts
Logic
Art
AAT,GAQ,
Cake Icing

இளந்தலை முறை ஆசிரியர் குழாத்தின்
-துடிப்பான கற்பித்தலில்.....
மாணவர் வெற்றியே எங்கள் இலக்கு!
நாம் உங்கள் வழிகாட்டிகளே!

# KPS ACADEMY

12, St, Lucias Street, Colombo - 13
Tel: 244 7534

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயலாளரின் உள்ளத்திலிருந்து....

திறந்த பல்கலைக்கழக மாணவர்கால் வருடம் தோறும் தைப்பொங்கல் கலாசாரவிழா கொண்டாடப்படுவது வழமை. அந்த வகையில் இவ்வருடம் நடைபெறும் தைப்பொங்கல் கலாசார விழாவில் வெளிவரும் "மருதம்" என்னும் மலரின் ஊடாக உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

பண்டைய காலம் தொட்டு இன்றுவரை தமிழ் மக்களால் சிறப்பாகக் கொண்டாடப்படும் விழாக்களில் சிறப்பு அம்சம் கொண்டது, உழவர் தம் திருநாளாகிய தைப்பொங்கல் விழா எனின் மிகையாகாது ஏனெனில் உழவன் பெறுகின்ற உற்பத்தி வெற்றியை நம்பியே அந்த நாடே இருக்கின்றது எனலாம்.
இதனை

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல்பவர்"

என்று வள்ளுவர் பெருந்தகை ஏனைய தொழில்களிலிருந்து உழவுத்தொழிலின் மேன்மையை உயர்வாகக் கூறுகின்றார். உழவன் தன் பயிர் சிறக்க ஒளி கொடுத்த ஆதவனுக்கு நன்றி செலுத்தும் நாள். உலகத்தாரோ உழவனின் பயிர் சிறக்க ஒளி கொடுத்தன்மூலம் நமது வயிற்றுப்பசியை போக்கியமைக்கு நன்றி செலுத்தும் நாள் இந்த நன்னாளில் நாமும் ஆதவனுக்கு விழா எடுத்துக் கொண்டாடும். இத்திருநாளில் வெளிவரும் பொங்கல் மலர் மேலும் மெருகேற்றுகின்றது.

இம் மலர் மாணவர்களின் திறமைகள் கட்டுரைகளாய் சிறுகதை தொகுதிகளாய் கவிதைத்தொகுதிகளாய் அறிவுக் களஞ்சியமாய் அமைந்து இதற்கு மேலும் அணி சேர்க்கும் ஆசியுரைகளும் இருந்து மெருகேற்ற பெரியோர்கள் ஏற்று விரும்பியளித்த விளம்பர உதவிகளும் ஆங்காங்கே தோன்ற. இம் மலரை ஒழுங்கமைத்து சிறப்பாக வெளிவர உதவிய அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.

இத்துடன் இப் பொங்கல் விழா சிறப்புற பல வழிகளிலும் தோளோடு தோள் நின்று உழைத்த உள்ளங்களுக்கு உதவிய, ஊக்குவித்த நெஞ்சங்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்து வாழ்வில் உயர்ந்திட வாழ்த்தி விடை பெறுகின்றேன்.

நன்றி
**ஜெ.கோகுலராசன்**
செயலாளர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின் இனிமை

என்னை இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே!

"கல் தோன்றி மண் தோன்றா
முன் தோன்றிய மூத்த தமிழ்...."

என்றொரு கருத்து தொன்று தொட்டே நிலவிவருவது யாமறிந்ததே. இத்தகைய தொன்மை வாய்ந்த தமிழ்மொழி உலகத்து செம்மொழிகளுள் ஒன்று என்பது இங்கு விதந்து கூறத் தக்கது. பன்மொழிப் புலவரான மகாகவி பாரதி தான் அறிந்த பிற மொழிகளோடு தமிழ்மொழியை ஒப்பிட்டு தமிழின் இனிமையையும், அதன் சிறப்பையும் உலகறியச் செய்தார். அத்தோடு,

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்...."

என ஒப்புதல் வாக்குமூலம் தந்துள்ளார்.

தமிழ் இனிய மொழி. இலக்கிய, இலக்கண சிறப்புடைய மொழி. தொன்மையான மொழி. இவ்வாறு தமிழின் சிறப்புக்களை அடுக்கிக் கொண்டே போகலாம். ஏழ்கடல் வைப்பினுந் தன் மணம் மாறாது வீசக் கூடியது. இதைத் தானே பழங்காலப் புலவர் ஒருவர்

"தொட்டாலும் கைம் மணக்கும்;
சொன்னாலும் வாய் மணக்கும்;
துய்ய சேற்றில் நட்டாலும்
தமிழ்ப் பயிராய் முளைத்திடுமே!"

என்று அழகுற விளக்கியுள்ளார். தமிழின் இனிமைதனைக் கூற இதை விடவும் சான்று தேவையா?

தமிழ்க்கவிதை வானிலே பாரதியோடு கைகோர்த்த நம் புரட்சிக் குயில் பாரதி தாசனும் தமிழின் இனிமையை பாட மறக்கவில்லையே! தமிழ் மொழியைக் காப்பதற்காக அவர் களம் புகவும் சிறை செல்லவும் தயங்கவில்லை.

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு!....

என்று முழக்கமிட்டுத் தமிழின் பெருமையை திசையமட்டும் பரப்புகிறார்.

தான் தமிழன் என்பதில் பாரதி பெருமிதம் அடைந்தவர். அத்தோடு

"தமிழன் என்று சொல்லடா
தலைநிமிர்ந்து நில்லடா...."

என்று எம்மையும் பெருமையடையத் தூண்டுகிறார்.

தமிழன் தனித் தன்மை வாய்ந்தவன். அவன் தனித் தன்மையால் அவன் தலைநிமிர்ந்து இறுமாப்புடன் நிற்பதற்கு தகுதி உடையவன் என்கிறார் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை.

"தமிழுக்கு அமுதென்று பேர்
அந்தத் தமிழின்பத் தமிழ்
எங்கள் உயிருக்கு நேர்!

என்ற பாவேந்தரின் கூற்றை இவ்விடத்தில் நினைவு கூர்வது பொருத்தமாக இருக்கும். எனவே தமிழனாக பிறந்து விட்ட ஒவ்வொருவரும் தமிழை உயிர் மூச்சாய் சுவாவித்து தமிழைத் தமிழாகப் பாவிக்க வேண்டும்.

" மெல்லத் தமிழினிச் சாகும் - அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்...."

எனப் பயந்த மகாகவி பாரதியின் அச்சத்தையும் நாம் தான் போக்க வேண்டும். அவன் காத்துத்தந்த தமிழைக் காற்றிலே பறக்க விடாது உயிர் கூட்டிலே கலக்க வேண்டும்.

"வீழ்வது நாமாக இருந்தாலும்
வாழ்வது தமிழாக இருக்கட்டும்"

ப.சஞ்ஜீவனி லசந்தகுமாரி
B.A (Tamil) (India)
சமூக விஞ்ஞான பீடம் மட்டம் - 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர் பக்கம்

அன்பான எமது உள்ளங்கள் அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்கள். இம்மலர் அட்டையானது தைத்திருநாளின் பொங்கல் விழாவையும் எமது கலாசார விழுமியங்களையும் தாங்கி வந்துள்ளது. மருதமலரானது கட்டுரைகள் கவிதைகள் தொகுப்புக்கள் போன்ற பல அம்சங்களை தாங்கிவந்துள்ளது. அத்தோடு பாரம்பரிய தெய்வீக அம்சங்கள் நவீன யுக கணனி கையடக்க தொலைபேசி போன்ற விடயங்களை தாங்கிவருவால் தொன்மையும் நவீன யுகத்தைத் அணைக்கும் ஒரு பாலமாகவும் பெரும் பொக்கிசமாகவும் இருக்கும் மருத மலர் உழவர்களின் திருநாள் ஆகிய தைத்திருநாளில் சூரிய பகவானாலும் நன்றிசெலுத்தும் நாளில் வருவதையொட்டி நாங்கள் மனமகிழ்வடைகிறோம். எமது நூலின் இணைய வடிவமைப்பை www.ousltamil.com என்ற தளத்தில் பார்க்கலாம்.

இதழாசிரியர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from*




# GOWRY JEWELLERS

**Dealers in Genuine 22ct gold Jewellery**

No. 176, Main Street, Negombo.
Tel: 031- 2234657



With best compliments from:

# RVR Engineering Consultants

Preparing House Plan and Estimate,
Undertaking Terrazzo Work,
Producing Building Items.

#36,38,2nd Cross Street,
Vavuniya.
Tel: 024 - 2222610, 024-2222916
E-mail: rvrvavuniya@hotmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SKVs INTERNATIONAL INSTITUTE

## LONDON (O/L) and (A/L) CLASSES

Mathematics, Accounting, Physics, Chemistry
Biology, Business Studies, English, English Literature

## Local (O/L) & (A/L) English Tamil Medium Classes

Mathematics, Science, Business Studies, Accounting, Social, Tamil, Sinhala, English, English Literature

## A/L

Combined Maths, Physics, Chemistry, Biology
Logic, Business Studies,Accounting, Economics

**Scholarship Examination (Grade 5) Classes**

## Computer Studies

Progarming Languages, Computer Hardware Technology, Under graduate Final Project
Computer Networking, Graphic Design , Certificate in operating system
Web Designing, NAITA (SRI-LANKA COMPUTER DRIVING LICENCE) COURSES.

## SAP ABA P/4 PROGARMING

## Electronic Courses

TV,Radio, VCD, DVD VCR, Fully Pratical with Theory.

## Language Courses

Spoken English, IELTS, TOFEL, Sinhala

***Total IT Solution***

# SKVs INTERNATIONAL INSTITUTE

**19-1/1, GALLE ROAD, DEHIWELA,**
**TP:0112 716502**
**Web:www.skvs.net**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from*

# LUXSHA COMMUNICATION
# & VIDEO CLUB

Local Calls, IDD Calls, Net 2 Phone, Fax, Photo copy,
Laminating, CD, DVD, VHS, Lending Audio Cassette Recording,

**Van for Hire**


***Connecting Calls Tel: 2366213***

17C, Hampden Lane,
Colombo - 06 Tel: 2366215

# tecnoXpert



ASUS Maxtor Kingston intel TwinMOS CREATIVE hp ViewSonic



**PC**
- Branded and Assembled PC
- Assembling, Upgrading
- Maintenance, Repairing, Service

**Network**
- Networking
- Wireless Networking
- Maintenance

**Others**
- VHS, DVD to VCD, DVD
- CDs

**Cost Effective Servers**
- 19" Rackmount 1U/2U/3U/4U, Tower
- Pentium 4 or 64 Bit Dual Xeon
- RAID 0/1/5/10/50
- Microsoft Windows or Redhat Linux
- Hot Swapable Hard Disk

redhat

**Techno Expert**
4C1-1/3,1/4 1st Floor, Fussels Lane, Colombo-06. Hotline:0712283122

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணன் திருவடிகளில் அர்ஜீனன் மாலையானான்

மகாபாரத்தில் குருஷேத்திரப் போர் முடிந்து, தர்மமானது அதர்மத்தை வென்றுவிட்டது. கௌரவர்கள் அனைவரையும் முழுமையாக அழித்து ஒழித்து பாண்டவர்களின் மூத்தோனாகிய தர்மர் உதிஷ்டிரன் தலைமையில் தர்மசாம்ராஜ்ஜியம் ஸ்தாபிக்கும் நந்நாளும் பிறந்து விட்டது. சூரியன் அஸ்தமிக்கும் வேளை அவ்வேளையில் அந்தக்கால முறைப்படி வெற்றிபெற்ற மன்னர்கள் மகாரதர்கள் தங்கள் வீரத்திற்கு உரிய மரியாதை பெறும் சடங்குகள் நிகழவேண்டி இருந்தது. அவரவர்களின் தேரோட்டிகள் இரத்தின் நின்றும் இறங்கி வந்து இரத்தை வலம் வந்து தரையில் மண்டியிட்டு நிற்க மகாரதர்களும் மன்னர்களும் தேரில் இருந்து இறங்கி வந்து தேரோட்டிகளின் மலர் மாலைகளை ஏற்று மக்கள் ஆரவாரம் செய்வதைக் கேட்டு மகிழ்ச்சி அடையும் நேரமது.

அந்த நேரத்தில் சூரிய பகவான் மறைந்து கொண்டிருக்க பஞ்சபாண்டவர்களின் ரதங்கள் வரிசையாக வந்து முறையே முதல் யுதிஷ்டிரன், வீமன், அர்ஜுனன், நகுலன், சகாதேவன் ஆகியோர் தங்கள் தங்கள் இரதங்களில் வீரமுடன் வீற்றிருப்பது மிகவும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. தர்மத்தின் மாபெரும் வெற்றியைக் கொண்டாடும் பொருட்டு அஸ்தினாபுரத்தில் எஞ்சியோரும், இந்திரப்பிரஸ்தப் பிரஜைகளும் வந்து கூடிக் குழுமி நிற்கின்றனர். தங்கள் தலைவர்கள் பெறப்போகும் மாலை மரியாதைகளைக் கண்டுகளிக்க அனைத்து வீரர் கூட்டங்களும் காத்து நிற்கின்றார்கள். அப்பொழுது யுதிஷ்டிரரின் தேர்ப்பாகன் தேரினின்றும் இறங்கிவந்து தேரை வலம் வந்து மண்டியிட்டு மன்னன் யுதிஷ்டிரன் பாதங்களைப் பணிந்து நிற்கிறான். யுதிஷ்டிரன் கீழே இறங்கி வந்ததும் அவனுக்கு மலர்மாலை அணிவித்து "யுதிஷ்டிடர் வாழ்க" என்று குரல் எழுப்புகிறான். அதைத் தொடர்ந்து "வாழ் வாழ்க" என்ற மக்களின் குரல் ஒலி வானைப் பிளந்து கொண்டு இருக்கின்றது.

அடுத்து இரண்டாவது முறையாக வீமனின் இரதம், வீமன் என்று சொன்னாலே எதிரிகள் எல்லோரும் நடுங்குனர்கள்; அந்தளவிற்கு அவன் மிகவும் முக்கியமான வெற்றிகளுக்குக் காரணமாக இருந்தவன்; மிகப் பெரிய வீரனல்லவா! உடலும் உயரமும் பருமனுடைய மலை போன்ற திடகாத்திரமானவனல்லவா! துரியோதனனின் தொடையை தன்னுடைய கதாயுதத்தினால் பிளந்தவனல்லவா! பாஞ்சாலியின் சபதத்தை நிறைவேற்றியவனல்லவா! நூற்றுவரின் மூத்தவனும் தலைவனுமான துரியோதனன் திரௌபதையின் துகிலுரியவும் திரௌபதையைத் தன்னுடைய தொடையின் மேல் கொண்டுவந்து இருந்தும்படி துச்சாதனன் திருஷ்டத்துய்மன் என்ற இருதரப்பினருக்கும் கட்டளை இட்டதும் அதன் காரணமாகத் திரௌபதை துரியோதனன் தொடையைப் பிளந்து அதன் இரத்தத்தைத் தன் கூந்தலில் தடவித்தான் கூந்தல் முடிவேன் என்றும் அது நிறைவேறாதவரை கூந்தல் முடியமாட்டேன் என்றும் சபதம் செய்து அன்றிலிருந்து தலைவிரி கோலமாகவே இருந்தவள்; அந்த நேரத்திலே பொங்கியெழுந்த வீமனைத் தர்மர் அமைதியாக இருக்கும் படி கூறி அமரவைத்தார். அதே நேரத்தில் வீமன் சீறியெழுந்து துரியோதனனின் தொடையைப பிளந்து உதிரத்தை எடுத்து தானே தருவேன் என்று திரௌபதைக்கு வாக்குறுதியளித்து சபையோர்முன் சபதத்தின் மேல் சபதம் செய்தான். அதன் படி பாஞ்சாலியின் சபதத்தையும் தன்னுடைய சபதத்தையும் ஒருங்கே நிறைவேற்றிய மாவீரன் என்பதால் மரியாதை சற்று அதிகமாகவே கிடைக்கின்றது. கரகோஷங்களும் வாழ்த்தும் வாழ்த்துக்களும் எல்லா இடங்களுக்கும் பரவி ஒலித்துக்கொண்டு இருக்கிறது. மிகவும் விமரிசையாக வீமனின் மரியாதைச் சடங்கு நடந்து நிறைவேறுகின்றது.

அதனை அடுத்து மூன்றாவது முறையாகப் பாரதப் போரின் கதாநாயகன் "வில்லுக்கு விஜயன்" வில்வித்தையில் மாபெரும் முதலாவது வீரனான அர்ஜுனனின் முறையில் அவனின் ரதம் நிற்கிறது. தேர்ப்பாகன் சர்வசாதாரணமானவனா? "துவாரகாபுரி ஸ்ரீகிருஷ்னனல்லவா" ஆகையினால் அர்ஜுனனுக்கு எவ்வளவு பெரிய மதிப்பும் மரியாதையும் இருக்கும் என்று கற்பனை பண்ணிப் பார்க்கமுடியாதல்லவா! பாண்டவர்களும் பகவானின் அவதாரம் என்று போற்றிப்புகழ்ந்த புண்ணிய புருஷன் அல்லவா; அர்ஜுனனின் தேரோட்டி. பின் பெருமைக்கு என்ன குறை; அர்ஜுனனுக்கு அனைத்துக் கௌரவமும் புகழும் அமைந்து அல்லவா இருக்கிறது.

எனவே யாருக்கும் கிடைக்காத பெரும்புகழும் பாக்கியமும் மதிப்பும் தனக்குக் கிடைக்கப்போவதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணி மனம் பூரித்தான் பீஷ்மர் விதுரர், துரோணர், பாண்டவர்களைச் சிறுவயதில் இருந்து வளர்த்தவர்கள். வில்வித்தை கற்றுக்கொடுத்தவர்கள், கல்விபயின்று கொடுத்தோர்கள், உடன்பிறப்புக்கள், அத்தனை பெரியவர்களையும், சேனைகளையும் கொன்று குவித்த காண்டீபத்தைக் கொண்ட வில் வீரன் என்ற படியால் அவனுக்கு தலைக்கனம் ஏறியது "துவாரகாபுரி ஸ்ரீகிருஷ்ணன்" தேரோட்டி என்றால் யாருக்குத்தான் தலைக்கனம் ஏறாது அவன் "கண்ணன்" யார் என்பதை அந்த ஒரு சிறிய நேரத்துக்குள் மறந்துவிட்டான்.

போர் புரியவென்று புறப்பட்டு வந்த குருஷேத்திரத்திலேயே போர்க்களத்திலே நின்று கொண்டு எதிர்த்திசையை நோக்கிப்பார்த்த அர்ஜுனனுக்கு "பீஷ்மரையும், துரோணரையும் விதுரரையும் கண்டவுடன் ஒருதிகைப்பு ஏற்பட்டது. ஏனென்றால் தாய்தந்தையாரைப் போல் இருந்து வளர்ந்த பீஷ்மர் ஒழுங்காக முறையே வில்வித்தைக் கற்றுக்கொடுத்து எல்லோரையும்விட அன்பும் பாசமும் காட்டி வில்லுக்கு விஜயன் என்ற முதன்மையான ஸ்தானத்தில் வைத்தவர். விதுரர் கல்வி கேள்விகளில் பாண்டவர்களை மேலோங்கச் செய்து அனைத்தையும் காட்டிக்கொடுத்து பயின்று கொடுத்த பெரிய ஆசான். துரோணாச்சாரியார் ஆகிய மூவரையும் கண்டவுடன் இவர்களை நான் கொல்வதற்காகவா இங்கே வந்தேன் அப்படிப்பட்ட மகாபாவியா நான்; என்ன பாவம் செய்தேன்; இன்னும் பெரிய பாவத்தையல்லவா செய்யப்போகிறேன் இந்தப்போர் வேண்டாம்; நான் போர்புரியமாட்டேன்; என்று கலங்கிநிற்கையிலே அவனுடைய அஸ்திரங்கள் கீழேவிழ காண்டீபத்தையும் நழுவவிட்டான்.

மரணத்தை எண்ணி கலங்கிடும் விஜயா
மரணத்தின் தன்மை சொல்வேன்

மானிடர் ஆன்மா மரணம் எய்தாது
மறுபடி பிறந்து இருக்கும்.

மேனியைக் கொல்வாய் நீ
அதன் மேனியைக் கொல்வாய் நீ

அது மறுபடி பிறந்திருக்கும்
நீ விட்டு விட்டாலும்

அவர்கள் மேவி வெந்துதான்
தீரும் ஓர் நாள்

மன்னவர் பொருள்களைக் கைக்கொண்டு நீட்டுவார்
மற்றவர் எடுத்துக் கொள்வார்.

புண்ணியம் இதுவென்று உலகம் சொன்னால்
அந்தப்புண்ணியம் கண்ணனுக்கே

கண்ணனே சாற்றினான் கண்ணனே தூற்றினான்
கண்ணனே போற்றினான் கண்ணனே கொலை செய்கிறான்
கண்ணன் மனது கல் மனது என்றோ
காண்டீபம் நழுவ விட்டாய்
காண்டீபம் எழுக நின் கைவண்மை எழுக

துணிந்து நில் தர்மம் வாழ
இக்களம் எல்லாம் சிவக்க வாழ
யுகே யுகே யுகே

அர்ஜுனனானவன் அஞ்சிப் பதுங்கி நின்ற நிலையிலேயே "ஸ்ரீகிருஷ்ணன்" அவனைத் தேற்றி அவனுடைய மனதைமாற்றி "விஜயா நீ அவர்களைக் கொல்லாமல் இரக்கம் காட்டினாலும் அவர்கள் அனைவரும் சேர்ந்து உன்னைக் கொல்லவே இங்கு வந்து உன் எதிரில் நிற்கிறார்கள் இன்னும் சிறிது நேரத்தில் உன்னைக் கொல்லப் போகிறார்கள் என்றான். உன் ஒருவனைக் கொல்வதற்காக எத்தனை பேர்கள் உன்எதிரில் வந்து நிற்கிறார்கள் என்று பார்த்தாயா? அவர்களுக்காகவா நீ இன்னும் இரங்குகின்றாய், அவர்கள் உன்னைக் கொல்வதற்கு முன் நீ ஒருவனாக நின்று அவர்கள் அனைவரையும் கொன்றொழிக்க வேண்டும்" என்று மாயக்கிருஷ்ணன் புத்தி புகட்டினான் "அதுவே கீதோபதேசம்"

"கண்ணன் கூறுகிறான்" அர்ஜுனா பாஞ்சாலி சபதம் போட்டுவிட்டு கூந்தல் முடியாமல் இருக்கிறாள்; அது நிறைவேறவேண்டும்; வீமன் சபதம் போட்டிருக்கிறான் அது நிறைவேறவேண்டும்; அதன் பின்புதான் அவள் கூந்தல் முடிய வேண்டும்; அண்ணன் தர்மனுக்கு தர்மராட்சியம் கிடைக்கவேண்டும்; பாண்டவர்களின் சுய கௌரவம் காப்பாற்றப்பட வேண்டும் அதர்மத்தை முற்றாக அழிக்கவேண்டும்; தர்மத்தை நிலை நாட்ட வேண்டும் பூமாதேவியின் பாரத்தைக் குறைக்கவேண்டும்; தர்மத்தை நிலைநாட்ட வேண்டும்; ஆக உன் முன்னிலையில் நிற்பவர்கள் நல்லவர்களாக இருந்தாலும் சரி தீயவர்களாக இருந்தா லும் சரி அவர்கள் அழியவேண்டும். ஏனெனில் அவர்களுடைய அழிவு காலம் வந்துவிட்டது. இன்னும் சில பொழுது கழிய அவர்கள் அனைவரும் உன் கையால் அழிவார்கள்.

அவர்களைக் கொல்வது நீயல்ல; நான் தான் கொல்லப் போகின்றேன் அதற்கு நான் உன்னை ஒரு கருவியாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவிக்கிறேன். ஆகவே நீ கொல்லாவிட்டாலும் அவர்களின் உடல் எப்பவோ ஒரு நாள் அழியத்தான் போகிறது; அதையும் நானே செய்வேன்; ஆகையினால் அவர்களைக் கொல்வதானால் உனக்கு ஒரு பாவமும் இல்லை; அது எல்லாம் என்னையே தான் வந்தடையும் என்பதானால் எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை; நீ வந்த வேலையைச் செய்; நான் சொல்வதை சரியாகச் செய்; அவர்களைக் கொல்லவென்றே உன்னைப் படைத்திருக்கிறேன்; அவர்கள் உன்கையாலேயே மடிய வேண்டியவர்கள்; அவர்கள் மடியும் நேரம் வந்துவிட்டதால் நான் இங்கு வந்திருக்கிறேன்; உன்னைப் பயன் படுத்துகின்றேன் அவர்கள் செஞ்சோற்று கடன் தீர்க்கவே இங்கு வந்திருக்கிறார்கள்; துரியோதனன் தகாத பாதையில் சென்று கொண்டிருந்த போதும் அவர்களால் அதைத்தடுத்து நிறுத்தமுடியவில்லை. அவனுடைய சோற்றை உண்டபடியால் அந்தக் கடனைச் செய்ய வந்தவர்கள்; அந்தக்கவலை உனக்குவேண்டாம். அவர்கள் செத்து மடியும் பொழுது அவர்களின் உடம்பு மட்டும்தான் அழியும் ஆன்மா என்றும் அழியாது என்னிடமே மீண்டும் வந்தடையும்; ஆத்மாவானது பரமாத்மாவிடம் வந்த பின்பு மீண்டும் பிறவி எடுக்கிறது. "இதுவே நியதி" இதற்கு யாரும் விதிவிலக்கல்ல இதுவே பிறப்பும் இறப்பும் என்பதாகும். பிரபஞ்சத்தின் இயற்கையும் இதுவே. பிறவியின் சுற்று வட்டமும் இது தான் ஆன்மா பிறந்து இறந்து கொண்டே இருக்கும். அது அழிவில்லாதது எனக்குள்ளேயே அனைத்தும் அடங்கும் என்று அர்ஜுனனை விழித்தெழ வைத்த கண்ணன் நான் இனி என் காரியத்தைச் செய்யப் போகிறேன் நீ பயப்படாமல் காண்டீபத்தை மீண்டும் கையில் எடுத்துக் கொள் என்று இந்த அற்புதமான "கீதோபதேசம்" செய்த அண்ணல் பகவான் ஸ்ரீகிருஷ்ணனை அப்போது தன்னுடைய தேர்ப்பாகனாகவே ஒரு குறைந்த தரத்தில் உள்ள தேரோட்டியாகவே மிகச் சிறிய தேரோட்டியாகவே மட்டுமே அவன் எண்ணினான். ஒரு கணம் தன்னறிவு மழுங்கி ஆணவம் மேலிட நின்றான். கண்ணன் தனது உற்ற நண்பன் பாண்டவர்களின் தூதுவன் மகாபாரதப் போரை வழி நடத்தி முடிக்க வந்திருக்கிறான் என்பதை அர்ஜுனனால் உணரவே முடியவில்லை.

கண்ணன் தேரை விட்டு கீழே இறங்குவான் என்று அர்ஜுனன் எதிர்பார்த்தான் ஆனால் கண்ணன் இறங்கவில்லை அர்ஜுனன் திகைத்தான்; எங்கும் ஒரே பரபரப்பு மனக்கிலேசமும் வியப்பும் நிலவுகிறது பார்ப்பவர்கள் மனதில் இனி என்ன நடக்கப் போகிறதோ என்று எதிர்பார்த்த வண்ணமாக நோக்குகின்றார்கள். அர்ஜுனன் ஒரு கணம் பொறுத்தான் அவனின் அறியாமை அவனுள்ளே பேசியது கடமையைச் செய்பயனை எதிர்பாராதே" என்று எனக்கு உபதேசித்த கண்ணன் இப்போது தான் மட்டுமே தேர்ப்பாகனுக்குரிய கர்மத்தைச் செய்யாமல் விதி விலக்குப் பெற நினைக்கிறானே" என்று அவன் சிந்தித்தான். மாயக்கண்ணனின் ஆழமான அறிவையும் அவன் அன்பையும் எடை போடமுடியாத விஜயன் தேரில் வந்து கீதை சொன்ன கண்ணனை யாராலும் அறிய முடியுமா? ஒருகணம் திகைப்பு; மறுகணம் அர்ஜுனா உடனடியாக நீ தேரினின்று முதலில் இறங்கிவிடு என்ற ஆணை கண்ணனிடம் இருந்து பிறந்தது இந்தத் தேர் ஒரு விதிவிலக்கு என்றான் கண்ணன்.

கண்ணனும் அர்ஜுனனும் உடலும் உயிரும் போல் என்றுமே ஒருவரை ஒருவர்விட்டு இணைபிரியாத உற்ற ஆருயிர் நண்பர்கள் அல்லவா. கண்ணனின் ஆணையை என்றுமே எதிலுமே மீறி அறியாதவன் அர்ஜுனன். ஆகவே கண்ணன் கூறுவதில் ஏதோ அர்த்தம் உள்ளது என்று எண்ணி தேரில் இருந்து காலடி எடுத்து வைத்து இறங்கி நடக்காமல் தேரினின்று குதித்தே விட்டான். ஒரு இமைப்பொழுதைக்கூட அப்பொழுது தாமதிக்கக் கூடாதுதென்று அப்படிக் குதித்தான்.

கண்ணன் ஏதும் அறியாதவன் போல தேரில்நின்றும் சிரித்தபடி மெதுவாக சாதாரணமாக இறங்கி வந்தான். பகவான் கண்ணனின் இரு பாதங்களும் நிலத்தில் பதிந்தது அவ்வளவு தான் அர்ஜுனனின் தேர் திடீரெனத் தீப்பற்றி வானளாவி எரிய ஆரம்பித்தது. பார்த்தோர் அனைவர் முகத்திலும் ஒரே பேரதிர்ச்சி. அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணன் கூறுகிறான், "அர்ஜுனா உனது எதிரிகள் உன் ரதத்தின் மீது ஏவிய மந்திர சக்திகள் அனைத்தும் நான் அத்தேரில் அமர்ந்திருந்த காரணத்தினால் எதுவிதமான செயற்பாடுகளுமின்றிப் பலனற்று இருந்தன. உன்தேரின் முடிவு காலத்தைத் தெரிந்து கொண்டுதான் உன்னை முதலில் இறங்கும்படி கூறினேன் நான் முதலில் இறங்கியிருந்தால் இந்தத் தீயினின்றும் உன்னைக் காப்பாற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கும். எனவே இப்போதும் உன்னைக் காப்பாற்றவே நான் சம்பிரதாயச் சடங்குகளை மீறினேன். அது தவிர வேறு எதற்குமல்ல; தேரோட்டியின் உரிய கடமையைச் செய்யத் தயங்கியதாலுமல்ல" என்று கூறி "சற்று நில் விஜயா, உன்னை வலம் வந்து உனக்கு மாலை இடுகிறேன்" என்று கூறினான் கண்ணன். இதைக் கேட்டதும் ஆணவம் அனைத்தும் அழிந்த நிலையில் அர்ஜுனன் தன்னையே ஒரு மலர்மாலையாக்கி கண்ணனின் திருவடிகளில் தன்னைச் சமர்ப்பித்துக்கொண்டான்.

நன்றி வண்ணை ஸ்ரீ வேங்கடேசவரதராஜ பெருமாள் தேவஸ்தானம், கும்பாபிஷேக மலர்

தொகுப்பு:-பா.ஜெகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியலை நோக்கி பெண்....

உல்லாச பூமியாக, சமதர்மப் பூங்காவாக நடைபோடவேண்டிய நமது சமுதாயமானது அரசியல், கல்வி கலாசார, பொருளாதார சறுக்குகளால் மாத்திரமன்றி சமூக சிந்தனைப் பிறழ்வினாலும் பின்னடைந்துள்ளது. சமுதாயத்தில் சரிபாதியான பெண்ணின் நிலையும் ஆண்களுக்குள்ள உரிமை போல கல்வி, தொழில்வாய்ப்பு என எல்லாத்துறையிலும் சமமாக நோக்கப்பட வேண்டும். இத்தகைய நிலை இன்றைய சமுதாயத்தில் நிலவுகிறதெனப் பலர் நம்பினாலும் அது உண்மையல்ல. என்பதே வெளிப்படையான உண்மையாகும். பெண் எல்லா நிலையிலும் தாழ்ந்தவள், இழிவானவள் என்ற கருத்து சமூகத்தில் புரையோடிக்கிடக்கின்றது.

சட்டங்கள் ஆழ்வதில் இருந்து பட்டங்கள் முதற்கொண்டு விண்வெளியில் கூட சாதனைப்படைத்திடும் பெண்கள் வாழ்க்கையில் மட்டும் விளக்கில் விழுந்து சாகும் விட்டில் பூச்சியாக உள்ள நிலைமை சிந்தைக்குரியது மட்டுமல்ல வேதனைக்குரியதுமே.

இச்சமூதாயத்தில் உயிர்கள் தோற்றம் பெறும் போது ஆண், பெண் என்ற பேதமின்றி ஆகாயத்திலிருந்து மழைத்துளி எப்படி நிர்மலமாய் பூமியை நோக்கி விழுகிறதோ அதே போலவே மனித உயிர்களும் பிறப்பெடுக்கின்றன. உடற்கூற்று அமைப்பைக்கு கொண்டு ஆண், பெண் எனப் பேதம் காணப்படுகின்றது. இந்த வேறுபாட்டைக் கொண்டு சமூதாயமானது வீரம், பலம், சுந்திரம் போன்றவற்றை ஆணுக்கு ஒரு விதமாகவும், பெண்ணுக்கு மென்மையும், இயலாமை, சுதந்திரமின்மை போன்ற வரையறைகளை ஏற்படுத்துகின்றன. இதனால் பெண் ஆணில் தங்கிவாழும் கொடியாகவும், சந்திரன் போன்ற குளிர்மையும் அழகு மலர் போன்ற மென்மையும். கவர்ச்சிப் பொம்மையாகவும், போகத்தின் சுரங்கமாகவும் சித்தரிக்கப்பட்டாள். குழந்தைகளைப் பெறுவதும், பேணி வளர்ப்பதும். சமைப்பதும் குடும்பத்தைக் கவனிப்பதுமான வாழ்க்கைக்குத் தள்ளப்பட்டாள். அடுப்பூதி வாழ் பவளுக்கு கல்வி அறிவு தேவையில்லை என கல்வி மறுக்கப்பட்டது. அவளும் தனது சுயநிலை உணராமல் சமுதாயம் எதை வகுத்து வைத்ததோ அதற்கு அடிபணிந்து வாழ்ந்து வந்தாள். பிற்காலத்தில் தீவிர சிந்தனை வாதிகளாலும், தீர்க்க தரிசிகளாலும் எமது தாய்நாட்டை அடிமை நிலையினின் விடுவிக்கச், சுதந்திரபாதையைத் திறக்க, பெண்ணின் அடிமை விலங்கு நொறுக்கப்படவேண்டும் என்ற பெண் விடுதலைச் சிந்தனையை முன்னெடுத்தனர்.

சமுதாயத் கட்டுப்பாட்டுக்குள் அடங்கி அமிழ்ந்து கிடந்த பெண்ணினம் இத்தனைச் சிந்தனைவாதிகளுடைய கோடுகாட்டலின். பின்னும் முற்றுமுழுதாக விழிப்புற்றதா? இல்லவே இல்லை. அரை உறக்கத்திலும், மயக்க நிலையிலிருந்து முற்று முழுதாக விடுபடாத இழிபறி நிலையில் அதாவது இனிப்புப் பாணியுள் மூழ்கிவிட்ட சிற்றெறும்பு விடுவித்து வெளியேற எத்தனிப்பது போலவே உள்ளது.

சமயம், அரசியல், கலாசாரம், பொருளாதாரம், கல்வி என்று ஒவ்வொரு வழியிலும் அவள் முன்னேறத் துடிக்கும் ஒவ்வொரு படிநிலையிலும் அவளைத் தட்டி அமர்த்தி உட்கார்த்தி விடுகின்றனர். உதாரணமாக சமயத்தை எடுத்துக்கொண்டால் இந்த சமயத்தைப் பொறுத்தளவில் "சிவனின்றி சக்தியில்லை சக்தியின்றேல் சிவனில்லை" என்று வேதாந்தம் கூறுகின்றது. இது சமத்துவத்தை பேணும் வார்த்தையாகும். ஆனால் பல சந்தர்ப்பங்களில் ஆண் திடமானவன். அறிவாளி, முதன்மையானவன் என்றும். பெண் எவ்வகையிலும் அவனுக்கு பணிந்து பாதங்களில் வீழ்ந்து எதிர்வார்த்தை பேசாமல் கீழ்படிந்து நடக்க வேண்டும் என்றும் அதுவே பெண்ணிற்கு பெருமைதரும் சிறப்பு சேர்க்கும் எனப் போதனையிலும் நடைமுறையிலும் நடத்துகின்றனர். இப்படி எல்லாம் இருந்துங்கூட கணவனுக்கு அவள் கசந்து போய் விரட்டப்படும் போது சமூகத்தினால் அவளுக்கு வழங்கப்படும் விருது "வாழாவெட்டி" ஆகும்.

பெண் என்பவள் வாழ்வு பூராவும் இளமையில் தந்தையிடமும் திருமணமானபின் கணவனிடமும் வயதானபின் மகனிடமும் என்று ஆண்களை அண்டி வாழ்பவளாகவே கருத்து பல்வேற கோணங்களில் சொல்லப்படுவதாலும் மரபுமரபாக இப்படியே வாழந்துவிட்டோம் இனி ஏன் மாற்றம்? என்று கருதுவோரும் சில பெண்கள் செய்யும் சாதனையை நினைத்துப் பெண்களுக்கென்ன பிரச்சினை? என முடிவுகட்டுவோரும் உள்ளனர். ஓரளவு உயர்வு பெற்றுள்ள பெண்களும் இதுவே பரமதிருப்தி என்ற மனநிறைவோடும் பிரச்சினையை ஏன் சீண்டுவான் என்று மௌனித்தும் உள்ளனர்.

பெண்ணினமே உனக்கொரு வேண்டுகோள் நம்முடைய முயற்சியில்தான் மனநிறைவு அடங்கியுள்ளதே தவிர அதன் முடிவில்லை. எந்த சந்தர்ப்பத்திலும் துணிந்து நில் துவண்டு விடாதே! விளக்காக ஒளிராவிடினும் விளக்கில் வீழ்ந்து சாகும் விட்டில் ஆகாதே!

சி.சில்வியா
இயற்கை விஞ்ஞானபீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best compliments from*

# TESCOA CROCERIES

## VAN FOR HIRE

Dealers in Local and Imported Sweets &
Chocolates, Biscuits Cool drinks Indian Sweets and
Cosmetics Items Available Here

**2, Mannar Road, Kurumankadu,**
**Vavuniya**
**Tel: 024-2224468**
**Mobile: 077 303 2025**

*With Best compliments from*

# ENVIEW TECHNOLOGIES PRIVATE LIMITED

**solar products**

Home lighting system, solar water pump system, street lighting lantern, solar water heater, solar air dryer, solar power station, solar drip iricatation, Solar telecommunication, solar power pack.

**we can design customer requirement.**

Head Office
30/4 Galle Road,
Dehiwela, Colombo

Branch
208/4,station Road,
Vavuniya
T.P 0244920006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best compliments from*

# COINS STARS

COMMUNICTION ENFERPRISE

**Net 2 Phone Services**
**Phone Accessories**
**Phone Lines**
**Phone Cards**
**Van Hire Services & More...**

303, Galle Road, Colombo - 06
Tel: 2506860
Tel: 114528632
Fax: 2505140
E-mail:coinsstars@hotmil.com

*With Best compliments from*

# SHINGAPOORE JEWELERS

Dealers in Genuine 22ct. Gold Jewelleries

**சிங்கப்பூர் ஜுவலர்ஸ்**
315, Galle Road,
Wellawatta, Colombo - 06,
Sri Lanka
Tel: 2363158

## EARN DEGREE EQUIVALENT INTERNATIONAL CERTIFICATES

Within 3 Months

Certificate in Adavce Hardware Engineering A+ (Internationally Recognized PC Technician)
Certificate in Advance Net working Network + (Internationally Recognized Network Technician)
Cisco Certificate Network Associate CCNA Certificate inInternational Computer Driving Licence ICDL In 10 Hrs

**COMPUTERIZED ACCOUNTING | ACCPAC | QUICK BOOK MYOB | PEACHTREA | TALLY**

DIPLOMA IN COMPUTER STUDIES | DIPLOMA IN GRAPHICS
DIPLOMA IN WEB DESIGNING | DIPLOMA IN MULTIMEDIA
HARDWARE ENGINEERING & NETWORKING | INTERNET & E-MAIL
24 Hrs online - ADSL | IELTS

# AIIT

## Amarican Institute of Information Technology

527, Galle Road, Wellawatte, Tel: 2361956 / 4514297

**Total solution for:**

Computer Education, Computer Sales & Services, Graphic Designing, web designing, Seftware development, Software Hardware Installation. Audio & Video Editing, Photo Editing, Data Writing, & All Desktop & Duplo Printing

527, Galle Road, Colombo - 06 Sri Lanka.
**Tel**: 2361956, 4514297, **E-mail**: banu_gk77@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best compliments from*

**MEDO STEELS**

Importers & General
Hardware Merchants
29A, Sangamitha Mawatha,
Colombo - 13,
Tel:2431399, 2470436,
Mob: 071 4307887, 071 4065425

*With Best compliments from*

*K. Lakshmanan*

*With Best compliments from*

**LANKAFOTO PHOTOGRAPHERS**

T.P -2320 401, 2434 987
84, &,86 Bankshall street,
Colombo-11

*With Best compliments from*

**GAMA ABACUS ACADEMY**
(BAMBALAPITYA CENTRE)

Interlecturl Brain Skill Development
For Age 4 To 15 Years

252B, 2nd Floor, Galle Raod
Colombo -04
Opposite of Milagiriya Church
Tel:077 77018

**Head Office**
399, Galle Road
Bampalapity
Colombo -04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best compliments from*

## Subani Jewellery

Dealers in Genuine 22ct.
Gold Jewellery
20B, Sooriya Bullding,
Chilaw Road,Negombo

## நியூசுபானி ஜீவலரி

20-B, சிலாபம் வீதி, நீர்கொழும்பு.
Sri Lanka.

Tel: 031-37592

*With Best compliments from*

## Es Mart

***Kingdom of Sarees***

**Importers, Wholesalers & Retailers of Textiles & Garments**

30/3, Hampden Lane, Wellawatte,
Colombo - 6, Sri Lanka.
Telefax: 2365828
www.esmartfashions.com

*With Best compliments from*

## Koshica Jewel Centre

## கோஷிகா ஜீவெல் சென்டர்

*Excellent Craftsmanship, Exquisite Design and Genuine 22kt Sovereign Gold Jewellery*

208, Main Street ,
Negombo, Sri Lanka.
Tel:031-2238557

*With Best compliments from*

## SHAN SUCCESS (PVT)LTD

**Shan Video**
**Shan photo**
**Shan Audio**
**Shan Communication,**
**Shan Net Cafe,**
**Shan Cab Service**

43/C, Kotahena Street,
Colombo - 13, Sri Lanka.
Tel:0112-384998/0114-614609-10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## SMS POEMS

### 1. FRIEND LIKE A COMPUTER

"Enter" your life
"Save" you in my heart
"Scan & Format" your problems
"Copy & Paste" Your kindness
And never "Delete" you from my thought
So you will never go to the "Recycle bin"

### 2. Crossed Cheque

Friendship is a crossed cheque of Rs "happy" which we both have... when you feel upset & alone withdraw it from my account when you are too happy deposit to my account.

### எதிர்பார்க்கும் பொங்கல்.....

தைமகளே வருக - வந்து எம்
தாயகம் சிறக்க அருள்க
தைமகளே வருக - வந்து செந்
தமிழர் துயரகல வழிசெய்க

வதைபடட தமிழினம் வாழ்வோங்க வேண்டும்
சிதைபட்ட வீடுகள் சீர்கொள்ள வேண்டும்
இனவாதம் புதைபட்டு அழிந்தோட வேண்டும்
மானத்தோடு எம்வாழ்வு உயிர்கொள்ள வேண்டும்

அன்பு மறனும் எழுந்தாட வேண்டும்
இன் சொல்லு எம் நெஞ்சில் குடிகொள்ள வேண்டும்
மண்ணுயிரைத் தன்னுயிராய் மதித்தாக வேண்டும்
வையத்தில் நாமொன்றாய் வாழ்ந்தாக வேண்டும்

ஒப்பமிட்ட புரிந்துணர்வு நிலைக்க வேண்டும்
பார் எங்கும் சமாதானம் பூக்க வேண்டும்
பாவையே எம்தாயே வருக வருக
பாரில் எலாம் மகிழ்வோடு பொங்குவோம்
போற்றுவோம்.

**தவராஜா திலீபன**
எந்திரவியல் தொழில் நுட்பபீடம்

### வசந்தமே வந்துவிடு.....

நேற்றுமாலை கண்டது ~ உன்முகம்
இன்று காலை மறந்தது ~ என்முகம்
நானாக மறந்தேனா????
நீயாக மறந்தாயா???
நிழலாக மறைந்து வாழ....
நீங்காமல் வந்திடுவாயா???
வரும் வேளை பார்த்து
வருஷமெல்லாம் காத்திருப்பேன்
உனக்காகப் பார்த்திருப்பேன்
வந்துவிடு வசந்தமே...

### கண்ணீர்த் துளிகள்...


கற்பனை முடியும்
கனவுகள் மறையும்
கவலைகள் மறையுமா?
மழைத்துளியோ மேகங்களால் வந்தது
கண்ணீர்த் துளியோ கவலையால் வந்தது

**ச.ஜெயமதி**
எந்திரவியல் தொழிநுட்பபீடம்

## LOVE

Love is the rainbow between two hearts
sharing of 11 Feelings

1. Affection
2. Liking
3. Truth
4. Sad
5. Secret
6. Helping
7. Regard
8. Friendship
9. Happy
10. Faith
11. Attachment



**S. Jeyamathy**
Faculty of Engineering Technology



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பா-ரதியே பாரதி

சேற்றிலே மலர்ந்த செந்தாமரையாய் முட்களின் நடுவே மோகன ரோஜாவாய் எட்டயபுரத்திலே அவதரித்த கவிக்குயில் தான் பாரதி. உள்ளத்தின் ஒளியால் வாக்கினில் ஒளி உண்டாக்கியவர். வள்ளுவனுக்கு தெள்ளிய வாரிசாய், ஷெல்லி, வால்ட்விட்மன், தாகூர், இக்பால் முதலிய கவிப்பேரரசர்கள் தரத்தில் மாற்றுக் குறையாமல், வரிசை தப்பாமல் அணிவகுத்து நிற்கின்றார். இத்தனைக்கும் காரணம் இவரது பாடல்களின் தரமும், இனிமையுமே என்பதை எவரும் மறுக்க முடியாது.

பாமரரும் படித்துப் புரிந்து அனுபவிக்கும் படியான எளிய, இனிய கவிதைகளைப் புனைந்து தமிழிலே ஒரு புதுமையையும், தமிழ்க் கவிதை வானிலே ஒரு புரட்சியையும், தமிழ் நாட்டிலே ஒரு மலர்ச்சியையும் ஏற்படுத்தினார். உணர்ச்சியும் உத்வேகமும் கொண்ட அவர் இலக்கியங்கள் சிரஞ்சீவித்துவம் வாய்ந்தவை. அவருடைய கிருஷ்டிகள் ஜீவன் நிறைந்தவை.

பாரதி தன் அடங்காதவிடையமே இல்லை என்று தான் கவிதைகளுக்குள் கூற வேண்டும். பெண்ணியம், சுதந்திரம், சாதி ஒழிப்பு என உலகளாவிய பலவிடயங்களையும் தன் கவிதைகளில் வடித்து விட்டார். அவை அனைத்தும் தமிழ் பேசும் நல்லுலகம் பெற்ற அழகுப் பொக்கிஷங்கள் என்றாலும் அது மிகையாகாது.

செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே - எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே
ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே" எனத் தன் தாய்த்திருநாட்டைப் பற்றி தன் வார்த்தை ஜாலங்களால் எத்தனை அற்புதமாய் வர்ணித்திருக்கின்றார் பாருங்கள்.

"சட்டங்கள் செய்யவும், பட்டங்கள் ஆளவும் பாரினில் பெண்கள் பிறந்து வந்தாரடி" என்றும் "நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்" என்றும், "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொழுத்துவோம்." என்றும் பெண்ணடிமைக்கெதிராக போர்க்கொடி உயர்த்தி மக்கள் மனங்களில் நீங்கா இடம் பிடிக்கின்றார்.



அந்தக்! என்றன் காலருகே வாடா!
சற்றே உனை மிதிக்கிறேன்... என்று தன் அஞ்சா நெஞ்சத்தை உலகிற்கே படம் பிடித்துக் காட்டுகின்றார். அவரது பாடல்கள் அனைத்துமே எப்பொழுது படித்தாலும் தெவிட்டா இனிமையையே தரும் என்பதில் ஐயம் வேண்டாம்.

அறிஞர் வெ. சாமிநாத சர்மா கூறியது போல் தமிழ் மொழியில் இனிமை இருக்கிற வரை
கவிதையில் உணர்ச்சி இருக்கிற வரை
நாட்டில் பெண்மைக்கு மதிப்பு இருக்கிற வரை பாரதி வாழ்ந்து கொண்டேயிருப்பார். இப்பொழுது பா-ரதியே பாரதி என்பது உங்களுக்கு நிருபணமாகியிருக்கும் என நம்புகின்றேன். அவரது அனைத்து பாடல்களையும் எடுத்து நோக்குங்கள். இந்த கருத்து இன்னும் முனைப்பாக நிற்கும்


வாழ்க பாரதி! ஓங்குக அவன் நாமம்!

**இரா. பிரதீப் குமார்**
மட்டம் 5
Civil



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from*




# New Western Gold Jewell

## வெஸ்டர்ன் கோல்ட் ஜீவெல்

Manufactures & Jewellers

171, Main Street ,
Negombo, Sri Lanka.
Tel:031-2234992

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from*



# Shanthi

22 Crt. genuine gold jewellry
all articles and guaranteed

224 B, Main Street,
Negombo,
Sri Lanka.

சாந்தி கோல்ட் ஹவுஸ்

Tel: 031-2239996
Mobile: 0777-812167


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HTML

## ( Hyper Text Mark up Language)

எங்கெங்கு பார்த்தாலும் ஒரே இன்டர்நெட் மயம். இது computer யுகம் என்று சொல்வதைக் காட்டிலும் Internet யுகம் என்று குறிப்பிட்டால் மிகையாகாது. முக்கியமான இரண்டு காரணங்களுக்காக Internet பயன்படுத்தப்படுகிறது. ஒன்று E-mail எனும் மின் அஞ்சல் இன்னொன்று கைக்கு எட்டும் தூரத்தில் தகவலைக் கொண்டு வரும் வெப்தளம். இது நமக்கு ஒரு வரப்பிரசாதம்.

ஒரு மனிதரைப் பற்றியோ புத்தகத்தைப் பற்றியோ இயக்கத்தைப் பற்றியோ கல்வித் துறை பற்றியோ, ஒரு பொருகளைப் பற்றியோ, எப்பொழுது வேண்டு மானாலும் நீங்கள் பெற்றுக் கொள்ளும் அளவுக்குத் தகவல் புதையலைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இன்று கோடிக்கணக்கானவர்கள் Internet உடன் இணைந்திருப்பதன் பின்னணியில், வெப்தளங்கள், புன்னகை செய்து கொண்டிருக்கின்றது. இவ்வளவு தகவல் எப்படி உங்களுக்குக் கிடைக்கிறன. நம்மை போன்றவர்கள் உலகத்தின் வெவ்வேறு மூலை முடுக்குகளில் இருந்தெல்லாம் உருவாக்குகிறார்கள்.

இதுபோன்ற வெப்தளங்களை நாமும் உருவாக்கலாம். இவற்றைச் சுலபமாக உருவாக்க HTML ( Hyper Text Mark up Language) உதவுகிறது. ஒவ்வொரு Computer மொழியும் கட்டளைக்குக் கொண்டு அமைவது போல, HTML பல்வேறு Tags கொண்டு அமைந்துள்ளது. இதன் மூலம்தான் நாம் கட்டளைகளைப் பிறப்பித்து தேவையான வெப்தளத்தை உருவாக்கப் போகிறோம்

இன்டர் நெட்டைப் பயன்படுத்திய ஆரம்ப காலத்தில் தகவலை Internet மூலம் பெற்றுக் கொள்வது கடினமாக இருந்தது. இதைப் பயன்படுத்துபவர் எண்ணிக்கை மிகக் குறைவாகத்தான் இருந்தது. இதை சுலபமாக்கி பலர் பயன்படுத்தும் படி வழி வகுத்தவா. Tim Berners Lee என்பவர்.

இவர் 1990 ஆம் ஆண்டில் தகவலைச் சுலபமாகப் பரிமாறிக் கொள்ள Hyper Text Links என்ற செய்முறையைக் கண்டு பிடித்தார். இதன் பெயர் Hyper Text Mark up Language இதன் சுருக்கமே HTML. HTML பிரபல மடைவதற்கு இதன் எளிமையே காரணம்

HTML ஐப் பயன்படுத்தி உருவாக்கிய வெப் தளத்தைச் சுலபமாக உங்கள் பார்வைக்கு கொண்டுவர, Mosaic என்ற பெயரில் ஒரு Browser ஐ, Marc Andreson உருவாக்கினார். இதன் வரவுக்குப் பின் HTML புகழ் அதிகரித்தது.

HTML மூலம் உருவாக்கும் வெப் தளத்தைப் பார்க்க உங்களுக்கு ஒரு Browser தேவைப்படுகிறது. Mosaic என்ற Browser வரவுக்குப் பிறகு Netscape Navigator மற்றும் Micro Soft நிறுவனத்தின் Internet explorer செயல்முறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

Text என்பது Ms-word, Note pad போன்ற word browser மூலம் நீங்கள் type செய்யும் தகவல் Hyper text என்பது சாதாரண டெக்ஸ்ட்டைப் பல்வேறு formatting மூலம் அதிமுகப்படுத்தி படங்களைச் சேர்த்து வேறு document களுக்கு Link ஏற்படுத்துவது.

சாதாரண Text களில் Tags சேர்த்து அதன் மூலம் கட்டளைகளைப் பிறப்பிப்பதுதான் Mark up ஆகும். HTML ஒரு Computer Language என்பதையே இதன் கடைசி எழுத்து L (Language) குறிக்கிறது. computer இல் BASIC COBOL போன்ற பல மொழிகள் இருப்பது போலத்தான் இந்த HTMLம். இதற்கும் தனி இலக் ணம் மற்றம் கட்டுப்பாடுகள் உள்ளன. உயிரினங்களைக் குறிப்பிடும் போது தலை, கை, கால் என்றுபாகுபடுத்திக் காட்டுகிறோம். அதேபோல் டைப்செய்யும் டாக்குமென்றிலும் தலைப்பு உபதலைப்பு குறிப்பு முதலிவற்றைப் பாகுபடுத்திக்காட்ட பல காலம் உதவுவதுதான் Mark up Language.

R.மயூரன்
Level 4&5 in B.Sc



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# தனது உறவைத் தேடி

அது ஒரு ஞாயிற்றுக்கிழமை மழை இலேசாக தூறிக் கொண்டிருந்தது. நாற்காலியை ஜன்னல் பக்கமாக இழுத்துப்போட்டு உட்கார்ந்து கொண்டிருந்தான் சுரேஷ். பார்வை வீதியில் இருந்தது. அவனுக்கு ஆபிஸ் இல்லை. ஆபீஸ் இருந்தால் கூட போவதில்லை.

இவ்வளவு நாட்களும் ஒழுங்காக போய்க் கொண்டிருந்தவன், எல்லா வேலைகளையும் ஒழுங்காகச் செய்ததால் அவனுடைய ஆபிஸ் முதலாளியிடம் நல்ல பட்டம் பெற்றவன், இப்போது அந்நிலைமைக்கு வந்ததன் காரணம் என்னவென்று தெரியவில்லை.

மரங்கள் நிறைந்த சோலையின் மத்தியில் அழகான வீடு; அன்பான மனைவி; மழலை கொஞ்சும் அழகிய குழந்தை நிம்மதியான வாழ்வு இப்படியான காலம் இருக்கையில் வழக்கம் போல தனது கருமங்களை செய்து தனது குடும்பத்தைக் கண்ணும் கருத்துமாக மகிழ்ச்சியுடன் நடத்தி வந்தான். மகிழ்ச்சியாக வாழ்ந்த குடும்பத்தை அழிக்க அரக்கன் வருகிறான். இதை அவர்களின் குடும்பம் அறியவில்லை.

அன்று காலைப் பொழுதில் அவன் தனது ஆபிசுக்குப் போவதற்குப் புறப்பட்டுப் போனான். இன்று தான் தனது மனைவி, குழந்தை தனது வீட்டைக் கடைசி நாளாகக் காண்பது என்பதை அவன் அறிய வில்லை. அவன் தனது ஆபிஸ் நோக்கி துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருக்கையில் காவல் படையினரின் வண்டி அவன் போகும் வழியை மறித்தது. அவனை விலங்கு பூட்டி கைது செய்தனர். யாரோ ஒருவன் ஒரு காவல் படையினரை கொன்று விட்டதால் அவனுடைய அடையாளம் இந்த அப்பாவியான சுரேஷின் அடையாளத்தைக் கொண்டிருந்தது. அவன் எவ்வளவு சொல்லியும் அவர்கள் கேட்டபாடில்லை. அவன் வேலைக்குப் போக வேண்டிய இடத்துக்குப் பதிலாக சிறைச்சாலை செல்ல வேண்டி ஏற்பட்டது.

அவன் தனது வாழ்வின் ஐந்து வருடத்தை சிறைச்சாலையில் கழித்து வந்தான். அவன் அப்பாவி கொலை செய்யவில்லை என்பதை அறிந்த காவல் படையினர் அவனை விடுதலை செய்தனர்.

அவன் தனது கிராமத்துக்கு வரும் வழி எல்லாம் தனது குடும்பத்தை பற்றியே எண்ணிக் கொண்டு வரலானான். இவ்வளவு நாட்களும் தனது மனைவி குழந்தையை விட்டுப் பிரிந்தவன் இப்போ காணப் போகிறான் என்ற ஆவலுடன் சந்தோஷமாகவும் புகையிரத நிலையத்துக்கு வருகிறான். அவனுடைய எண்ணம் எல்லாம் தனது குடும்பம் பற்றியதே.

தனது வீட்டுக்குப் போகும் பாதைக்கு இறங்கி நடக்கிறான். அன்றைய நாட்களின் சனநடமாட்டம் சிறியளவில் தான் இருந்தது. சில வீடுகளில் புற்கள் வளர்ந்து மயானம் போல் காட்சி அளித்தது. தனது வீட்டுக்கு வந்து பார்க்கிறான் புற்கள் வளர்ந்து மயானம் போல் காட்சி அளித்தது. தனது மனைவி குழந்தையைக் கண்டீர்களா என்று ஆவலுடன் கேட்கிறான். அவர்கள், "காடையர்கள் எமது கிராமத்தை சுற்றிவளைத்து மக்களை கொன்று குவித்தார்கள். நாங்கள் எல்லாம் தப்பி பாதுகாப்பிற்கு போனோம் என்றும் இந்தக் குறிச்சியில் இருப்போர் அனைவரும் வேறு இடத்தில் இருப்பதாகவும் கூறினார்கள். அவன் தனது மனைவி குழந்தைகள் அக்காடையருக்கு இரையாகி இருப்பார்களோ என்று நினைத்து அழவே ஆரம்பித்து விட்டான்.

மக்கள் எல்லோரும் அவனை ஆறுதல் படுத்தினர். அவன் மனைவியையும் குழந்தையையும் தேடும் முயற்சியில் இறங்கினான். தான் தனது பழைய தொழிலை மேற்கொண்டு தனிமையில் தனது உறவைத்தேடுகிறான். அவள் அக்காடையருக்கு இரையாகியதை யார் காணுவார்கள். எனினும் தனது மனைவி குழந்தை உயிருடன் இருக்கிறார்கள் என்ற தன்னம்பிக்கையுடன் இருக்கிறா அன்று ஞாயிற்றுக்கிழமை; மழை தூற்யதையும் பொருட்படுத்தாது தனது உறவைத்தேடிப் புறப்பட்டுப் போகிறான். பாவம் உண்மையை யார் அறிவார்கள்....!

***செல்வி வாசினி சங்கரப்பிள்ளை***
2ம் வருடம்
விஞ்ஞான பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல்

சிலர் sick என்பர்
சிக்கிய சிலர் தப்பென்பர்
சிக்காச் சிலர் சிக்கத்துணிவர்,
சிக்கியோர் தாம் சிந்திப்பார்....


சித்திரங்கள் சிற்பமாகும்,
சிற்பங்கள் சிரித்து நிற்கும்,
அவளின் அதிர்வெண்கள்
அங்காங்கே உன்னை அரித்தெடுக்கும்..

அவளின் பார்வைகள் பரிவுபட்டு - உன்னுள்
உருகும் உணர்வுகள் உக்கிரமெடுக்கும்
உருக்கத்தின் நெருக்கம்கூடி,
உறவுகளின் பருமன் மாறி - அவை


அன்பெனும் வெள்ளமாகி
காதலெனும் முகிலாகி
கருணை எனும் இடியாகி..
கண்ணீர் எனும் மழையாய் பொழியும்...

இதைச் சகபாடிகள் ஊக்கமென்பர்
தந்தை அழிதல் என்பார்
தாய் சீதனம் சிதைதல் என்பார்
நாம் இதை காதல் என்போம்....

**K.Kesavan**
BSc.3rd year.







பெண்ணாக
பிறந்து
விட்டதனால்

தவமிருந்தாள் தாய்
தரணியில் தனக்கும்
வேண்டும்
"பிள்ளை" என்று....

தானிருந்த தவத்தால்
பத்து மாதங்கள்
பத்திரமாய் சுமந்து
முத்தெனவே பெற்றெடுத்தாள்
பிள்ளையது "பெண்" என்று...

பெண்ணாக பிறந்து விட்டதால் - தந்தைக்கோ
பேரிடி வந்து விழ - அன்றிலிருந்து
பெட்டியில் சேர்க்கலானாள்
பெண் அவளுக்கு தேவை "பொன்" என்று...

இன்று அவளுக்கு
இருபது வயதெனவே - பெற்றோர்
கன்னியவளை காளை ஒருவனிடம்
கரம் பிடித்து கொடுக்க பேசினர்
"கல்யாணம்" என்று...

கல்யாண சந்தையில்
கன்னியவளை - காளையர்
கரம் பற்ற மறுத்தனர்
காரணம் அவளோ
"கறுப்பு" என்று....

மு. கோபிதர்சன்
பொறியியற் தொழில்நுட்பப்பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் வெல்வேன்

அன்று புதன்கிழமை கண்ணன் அவசர அவசரமாகப் பாடசாலைக்கு ஆயத்தமானான். தந்தை வேலைக்குப்புறப்பட முன்னர் தயங்கித் தயங்கிச் சென்றான் தந்தைக்கு அருகில் "அப்பா! எனக்கு சைக்கிள் வேண்டித் தாங்கோ" என்றான். தந்தை அவனை உறுத்துப்பார்த்துவிட்டு "இந்த மாத றிப்போட் தந்தாச்சா?" "நாளை தான் தருவார்கள்" என்றான். அதில் எத்தனை யாவதாக வருவாய் என்றார்.

தெரியவில்லை................
"சரி... போன அரை இறுதிப் பரீட்சையில் எத்தனை ஆவதாக வந்தாய்? இரண்டாவதாக இந்தவருடம் எப்பவாவது முதலாவதாக வந்திருக்கிறாயா? சொல்லுடா" என்றார். "இல்லை" என்று தலை அசைத்தான். "போன வருடம் முழுவதும் நீ முதலாவதாகத் தானே வந்தாய் இப்ப என்ன நடந்தது உனக்கு?" தரையையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் கண்ணனை திரும்பவும் கோபத்துடன் கேட்கிறார்.

அவன் தந்தையை நோக்கி "அது வந்துப்பா குமார் வந்து சேர்ந்து விட்டான். அவன்தான் முதலாலவதாக வருகிறான்" என்றான். "நீ! அவனைவிட முதலாவதாக வா உனக்கு சைக்கிள் வாங்கித் தருகிறேன்" என்றார் தந்தை. "உண்மையாகவா? ம் நிஜமாகத்உண்மைதான்." கண்ணன் அதன் பிறகு விளையாடுவதை நிறுத்திவிட்டான்.

கண்ணனின் தாய் சைக்கிள் வாங்கித் தரும் வரைக்கும் படிப்பான். வாங்கிய பிறகு மோசமாகிப் போடுவான் என்றார். தந்தையும் அவன் முதலில் முதலாவதாக வரட்டும் பிறகு யோசிக்கலாம் என்று கூறிவிட்டுச் சென்று விட்டார்.

கண்ணன் தனது நண்பர்களுடன் ஊர் சுற்றுவதையும் விளையாட்டையும் விட்டுவிட்டு ஒரே படிப்பாக இருந்தான். இரவு பகலெனப் பாராது படித்தான். பரீட்சை நடைபெற்றது. பரீட்சையை எழுதி விட்டு புள்ளிகளுக்காக எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் வழக்கமாக பாடசாலை சென்று வரும்போது ரிப்போட்டுடன் வந்து நின்றான்.

தந்தை முகம்மலர "என்னடா முதல் மாணவனா" என்று கேட்டார். "இல்லை அப்பா" என்று வெட்கத்துடன் சொன்னான். "கணக்கில் குமார் என்னைவிட பத்துப்புள்ளிகள் அதிகமாக பெற்றுவிட்டான் அடுத்த மாதம் எப்படியும்" என்றான் உற்சாகத்துடன் தந்தை சிரித்தபடி கையெழுத்து இட்டார். அந்த மாதம் அதிக நேரம் கண் விழித்துப் படித்தான் அவன் மீது கொஞ்சம் பாவமாக இருந்தது.

அந்த மாதம் பரீட்சை எழுதி முதலாம் மாணவனாக வந்து றிப்போர்ட்டை நீட்டினான். டேய் எத்தனை யாவதாக வந்து விட்டாய் என்று தந்தை வினாவினார். முதலாவதாக வந்துள்ளான் என்று தாய் கூறினாள். "உண்மையாகவா" என்று கேட்டார் தந்தை. உண்மையாகத்தான் முதலாவதாக வந்துள்ளான் என்று கூறினாள்.

இதை ஏன் கண்ணன் கூறவில்லை என்ற சிறு கவலையுடன் கண்ணனைக் கூப்பிட்டுக் கேட்டர். முதலாவதாக வந்துவிட்டாய். சைக்கிள் வேண்டித் தருகிறேன் என்று கூறினார். கண்ணன் வேண்டாம் அப்பா என்று கூறினான் இதை கேட்டதும் தந்தைக்கு ஒரேவியப்பு "என்னடா சொல்கிறாய்? சைக்கிள் வேண்டாமா?" என்றார்.

ஆமாப்பா இந்த முறை முதலாவதாக வந்தேன் என்று ஒழிய அதைப் போராடி எடுக்கவில்லை குமாருக்கு காய்ச்சல் என்று கூறியதுடன் அடுத்த முறை பரீட்சை எழுதி நான் முதலாவதாகவும் குமார் இரண்டாவதாகவும் வருவது தான் பெருமை அடுத்த முறை பார்ப்போம் என்று கூறினான்.

"கண்ணா இது தான் சிறந்தது இது வெற்றிமிக்க தோல்வியடா. சொல்லப்போனல் வெற்றியை விட இதுதான் சிறந்தது. உனக்கு சைக்கிள் வேண்டித் தருகிறேன். புறப்படு" என்றார் தந்தை.

கண்ணனும் தநதையும் சைக்கிள் வாங்குவதற்கு சென்றார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best compliments from*

# SRIS COMMUNICATION

**KURUMANKADU, VAVUNIYA**

T.P: 024-2222534, 024-2222386

FAX :024-2222709, 024-2222466

*With Best compliments from*

# KRISHCO International Pvt. Ltd

**KRISHCO TOURIST HOTEL**

**MOBITEL AUTHORISED DEALER (VAVUNIYA)**

**172, Sri Kathiresan St,**

**Colombo 13**

**Tel: 011 471 2786/9, 011 46 2217**

**Mobile: 071 4181888, 0777-760433**

**Fax: 011 461 2218, 011 4612221**

**E-mail: krishco5@sltnet.lk**

**Web: www.krishco.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best compliments from*



# Ganesha Jewel House

for modern Distinctive and Genuine Quality Jewel

123,Bazaar Street,
Vavuniya .
Tel -024 222 2464

**Branch**

Yarl
**Ganesha**
Jewel House
124,sea street, Colombo 11
Tel 011 233 6252

**Ganesha**
Jewel House
194, Kasthuriyar road,
Jaffna
Tel 021 222 5987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best compliments from*

## Sri Sugandan's Studio

**For Video filming & Photography VHS to DVD,
VHS to VCD & Digital Video Filming**

**289 1/1, Galle Road, Colombo - 06
Opp. Wellawatha Police Station
Tel: 011-250-7265
Mobile: 0777 309638**

*With Best compliments from*

**Natwest Internet Café**

Nat West TIMBER WORKS

Nat West
Aluminium & Stainless steel Fabricators

Nat West
Travels & Tours

ARAMEX Worldwide Courier Service
[Agent]

NatWest

9, 1st Floor, 33rd Lane
Colombo 6
Tel: 2361780, Mobile: 0777563323
E-mail: natwest@gawab.com
kumara1973@hotmail.com

*With Best compliments from*

## PHONE PLUS

Dealers in GSM Packages,
Mobile Phones, Repairing,
Accessories

**We unlock All Kind of Mobile Phones.
Software Upgrading and Repairs
Specialist in 3G phones Unlocking**

No-01,Mannar Road,
Kurumankadu,
Vavuniya.
Tel: 024 - 222 0420
Mobile: 0777 238807

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது இந்த மலரின்
இணைய தள வடிவமைப்பை
www.oulstamil.com
இல் பார்க்கலாம்

**JEWEL PLAZA**
Specialist in finest
quality & Latest Jewellery

373, Bazaar Street,
Vavuniya
Tel: 024-222 2392

*With Best compliments from*

**NOBLE PRINTERS**

103, Palay Road,
Jaffna
Mobile: 0777 145399

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best compliments from*

# EAST - WEST FOODS

# EAST - WEST

## FOODS (PVT) LTD

Sales and Stores
4, Farm Road,
Colmbo 15
Tel: 2521903-4, 2520905
2521461, 252 1235
Fax: 252 1858
Email: ew_foods@sri.lanka.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கல் மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்



சகலவிதமான பலசரக்குப் பொருட்களை
நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஒரே நிலையம்

# V.K.P

பல்பொருள் வாணிபம்

முதன்மைச் சாலை
தண்ணீர்ஊற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best compliments from*

**WESTERN UNION** மணி டிரான்ஸ் ஃபர்

Authorised Agent
**MMBL Money Transfer PVT(Ltd)**
300,Gall Road ,Colombo-03

Vavuniya Agent:
**R.B. Chandrakumar.**
## GOBY AGENCY
33, Mill Road,
Vavuniya
Tel: 024 - 222 2411, 024 4589225, 024-222 4351



*With Best compliments from*



## ஸ்ரீ நதியா ஜுவலர்ஸ்

52, பசார் வீதி
வவுனியா
தொலைபேசி 024 222 1098

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best compliments from*



**S.V.T KOOPURAM RICE MILL**

# KOOPURAM

**Stoneless Speical**

Samayapuram Road,
Nelukulam
Vavuniya
Tel: 060-2240047

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறந்த பல்கலைத்திணிப்பு!

தீடீரென வந்தது ஆசை படிப்பில்
திருப்பிப் பார்த்தேன் தினசரிப் பேப்பரை
திறந்த பல்கலையின் அழைப்பு - அதுதான்
விளம்பர உழைப்பு
விரும்பிய என் ஆசை ஆஹா!
வீணாகிப் போகவில்லை எனும் நினைப்பு
விரும்பிப் படித்தேன் விளம்பரப்பகுதியை
அத்துடன் வேலை செய்வோரும்
படிக்கலாம் எனும் பசப்பு வாசகம் வேறு
இரட்டிப்பு மகிழ்ச்சி கூடவே
இதயத்துடிப்பு அதிகரிப்பு.....
காரணமில்லாமலா இல்லை
காசில்லாமல்! கணக்குப் பார்த்தேன்
சமப்படுத்த முடியவில்லை!
தலைக்குமேல் வெள்ளம்
பரவாயில்லை உழைப்பும் படிப்பும்
மனிதனை ஊக்குவிக்கும் என்றனர்
வாங்கிய விண்ணப்பம் விரைந்தது
பல்கலைக்கு! வந்தது அழைப்பு
எதற்கு Persona Tutor Clinic
தொடர்பாடலாம்! சென்றேன் பயத்துடன்
படித்தவன் பண்புடையவன் உண்மை
அருமையான ஆரம்ப வழிகாட்டல்!
படிப்புத் தொடங்கியது மட்டம் 3
எலிஜிபிள் எக்ஸ்ஸாமாம்
எல்லாம் எலிஜிபிள்! ஆனால்
காலை வாரியது தாய்மொழி ஆங்கிலம்!
தன்னம்பிக்கை கூடியது! முயன்றேன்!
முயற்சிக்கு வெற்றி மூன்றாம் வருடத்தில்
Degree கிடைத்த feeling
படிப்பு மட்டுமா? கலாசார விழாக்கள்
யூனியர் என்றனர்! சீனியர் என்றனர்!
எல்லாக் கூத்தும் மூன்று நான்கு மாதங்கள்
எலிஜிபிள் எக்ஸாமுடன் எஸ்கேப் ஒரு கூட்டம்!
குழுக்கள் உருவானது மறுபுறம்!
சேர்ந்தவர் பிரிந்தனர்! பிரிந்தவர் சேர்ந்தனர்
இது உலக நியதிதானே!
மட்டம் 4 மடக்கிவிட்டது
Overtim+Eeligible Exam= Noneligible
Day & Night Duty + Final exam = RE
சொல்ல மகிழ்ச்சி சுமக்கத்தான் கஷ்டம்
வேலை செய்து படிக்கலாம் என்றதை
நம்பிவிட்டேன். சொறி
விளம்பரந்தானே போட்டார்கள்?
வீணாகிப் போச்சு காலம் மட்டுமா?
காசுந்தான் ஏன்?
நொண் எலிஜிபிள் என்றால்
கட்டணம் டபிளாம்?
கடவுள்தான் காப்பாற்றணும்
மட்டம் 4 எல்லாம் எலிஜிபிள்
சந்தோஷம் தானே?
பைனல் எஞ்சியிருக்குதே ஏன்?
பார்த்தெழுதித்தானே (OIBT) எலிஜிபிள் வந்தது
பைனல் எழுதணுமே ஆங்கிலத்தில்!
பார்த்துக் கொண்டிருக்கிறேன்
சக மொழி மாணவர் கெட்டிக்காரர்
எம் மொழியிலும் எழுதலாம். தமிழனாச்சே
திருத்த ஆளில்லையாம்! இல்லை
ஆங்கிலத்தில் நான் எழுதணுமாம்!
அப்போ எனக்கு தற்போதில்லை
பல்கலைப்பட்டம்? பார்ப்போம்
கனிவு வராதா? கல்விக் கூட
பீடாதிபதிகளுக்கும், கலாநிதிகளுக்கும்?
பொங்கல் விழாவென்றால் பொற்காலம்
எம்மிடைப் பட்டதாரிகளுக்கு
சோடி சேர்ப்பத்தில் மகா கில்லாடிகள்
பாவம் இளசுகள் இம்முறை
எத்தனை பேரின் தலையில் மண்ணோ
சோடி சேர்ந்தவர்களும் உண்டு!
சேரப் போகிறவர்களும் உண்டு!
பரவாயில்லை பல்கலைதானே
பயிலுங்கள் பலதையும்
அதற்காய் மனிதத்தை
மழுங்கடிக்காதீர்கள்!
எம்முடன் வந்தோர் பிரிந்து சென்றுவிட்டனர்!
சும்மாவா என்ன?
பட்டத்துடன் சிலபேர்! வெறுங்
கையுடன் சிலபேர்! நாம் எவ்வகையோ!
பெண்களுக்கென்ன புத்தகமும் கையும்.
வாழ்வில் முன்னேற்றம் கட்டாயம் தேவை!
இல்லையேல் கலியாணமும் காலந்தாழ்த்தியே!
கவலைப் படாதைங்கோ பட்டந்தரப் பல்கலைகள்
ஆனால் நொண் எலிஜிபிள்
திண்டாட்டம் வேண்டாம் இருக்கே
திறந்த பல்கலைப் படிப்பு அது தான்
ஒருவகைத்திணிப்பு?
திணிப்பு வாழ்க்கையே விதியாகிப் போச்சே!
புத்தம் உண்டு புதுசாய்
காரணம் காசுகட்டித்தானே
வாங்கினோம்! கணக்கில்லை
காலைவாரி விட்டிடாதிங்கோ!
கவலையாயிருக்கு..!

K.P. கண்ணதாசன்
(இயற்கை விஞ்ஞானபீடம்
மட்டம்-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைத்துளிகள்

எவரையும் வீணாகச் சந்தேகப் படாதீர்கள் உங்கள் உள்ளம் தூய்மையாக இருந்தால் அதில் சந்தேகம் எழ முடியாது அன்பான உள்ளங்களைச் சந்தேகப்பட்ட எவரும் சொர்க்கத்தில் இல்லை.

கடமையைச் சரிவரச் செய்யுங்கள் மற்றவர்களை நோக வைக்காதீர்கள் மற்றவர்களுக்கு நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்யாதிருங்கள்.

படித்தவனுக்கும் பதவியிலுள்ளவனுக்கும் பேரும் புகழும் வேண்டி உதவுவதில் அர்த்தமில்லை. உங்களுக்குக் கீழ் உள்ளவர்களைப் பாருங்கள் அவர்களுக்கு உங்களாலான உதவிகளைச் செய்யுங்கள் ஆத்ம ஞானம் பெற இதுவே சிறந்த வழி!

"கால்" தடுமாறினால் சமாளித்துக்கொள்ளலாம். "நா" தடுமாறினால் விபரீத விளைவுவே உண்டா கும். "நா" வை அசைக்குமுன் தெளிவான சிந்தனை வேண்டும் நா - காத்து இன்சொல் கதைப்பது எமக்கும் நல்லது மற்றவர்க்கும் நல்லது.

பொறாமை துவேஷம் சந்தேகம் பழிவாங்கும் மனோபாவம், சுயநலம் முதலிய களைகளை உங்கள் இதயத்தலிருந்து அகற்றிவிட்டு அன்பை பயிரிடுங்கள். இதன் சக்தி சொல்லில் அடங்காது. ஆழம் அளக்க முடியாது அன்பு தெய்வீகமானது.

எமது கஷ்டங்களுக்கும் துன்பங்களுக்கும் மற்றெருவன் காரணமல்ல; மற்றவர்களை நோவதில் எவ்வித அர்த்தமுமில்லை! ஏனெனில் நாம் ஒவ்வொருவரும் எமது வினையின் பலன்களைத்தான் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

ஒருவன் மகிழ்ச்சியுடனும் நிம்மதியாகவும் வாழமுடியாமைக்கு காரணம் அவனின் மனம் அறிவை வளர்த்தால் மட்டும் போதாது மனம் பண்படவேண்டும் அப்போது தான் வாழ்வு சிறக்கும்.

நிந்தனை பொறுத்து குற்றங்களைத் தாங்கு! மன உறுதி வளரும் வாழ்வில் நிம்மதி கிடைக்கும்

இறைவன் ஒரு இருதயவாசி! ஒவ்வொருவரின் இதயத்திலும் நிறைந்து நிற்கிறார். அதனால் உங்கள் வாய்ப்பேச்சை நிறுத்தி மற்றவர்களின் இதயத்தைப் பாருங்கள். மற்றவர்கள் முன்னிலையில் வாயை பாதியளவு மூடி இதயத்தை முழுமையாகத் திறவுங்கள் ஆனந்தம் கிட்டும்.

தீய எண்ணங்களும் குறை காணும் குணங்களும் ஆணவத்தையே வளர்க்கும். மாறாக அன்பும் பண்பும் பாசத்தைத்தரும் பொறுமையும் நாவடக்கமும் பெருமையைத்தரும் இவற்றைப் பெற்றல் மட்டுமே நீங்கள் தேடும் ஆன்மீகம் உங்களுக்கு அமைதியைத்தரும்.

மற்ற உயிர்களிடத்து என்றும் அன்பாயிரு! உனக்கு செய்யப்பட்டதவறுகளை மறந்து மன்னித்துவிடு! துயருற்றிருப்பவர்களுக்கு ஒரு அன்பான வார்த்தை சொல்லு! இவை தான் தர்மம்

சி. ரவிசங்கர்
பொறியியல் தொழில் நுட்பபீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைத்துளிகள்

வணங்கத்தக்கவர்கள் — தாயும் தந்தையும்
வந்தால் போகாதது — புகழ், பழி
போனால் வராதது — மானம், உயிர்
தானாக வருவது — இளமை, முதுமை
நம்முடன் வருவது — பாவம், புண்ணியம்
அடக்கமுடியாதது — ஆசை, துக்கம்
தவிர்க்க முடியாதது — பசி, தாகம்
நம்மால் பிரிக்கமுடியாதது — பந்தம், பாசம்
அழிவைத் தருவது — பொறாமை, கோபம்
எல்லோருக்கும் சமமானது — பிறப்பு, இறப்பு
கடைத்தேற வழி — உண்மையும், உழைப்பும்
ஒருவன் கெடுவது — பொய்சாட்சி, செய்நன்றி மறப்பது
வருவதும் போவதும் — இன்பம், துன்பம்
மிக மிக நல்லநாள் — இன்று
மிகப்பெரிய வெகுமதி — மன்னிப்பு
மிகவும் சுலபமானது — குற்றங்காணல்
நம்பக் கூடாதது — வதந்தி
ஆபத்தை விளைவிப்பது — அதிகபேச்சு
செய்யகூடாதது — தவறுகள்
செய்யவேண்டியது — உதவிகள்
விலக்க வேண்டியது — விவாதம்
உயர்வுக்கு வழி — உழைப்பு
நழுவவிடக் கூடாதது — வாய்ப்பு

K.Suresh Dharshan
Faculty of Engineering Technology (Electronics)

# பேசுவது பற்றி....

பேசுவது பற்றிப் பேசுவது
பேசுவது பற்றியும் பேசுவது
பேசுவது பற்றியே பேசுவது
பேசுவதையே பேசுவது
பேசுவது பற்றிப் பேசாமலிருப்பது
பேசாமலிருப்பது பற்றி பேசுவது
பேசாமலேயே இருப்பது

தேசியம் பற்றி
சுதேசியம் பற்றி
சுயநிர்ணயம் பற்றி - என
பற்றியெல்லாம் பேசிப் பேசி
பற்றில்லாமல் போன பிறகும்

ஏதேதோ பற்றியெல்லாம்
இன்னமும் பேசப்படுகிறது

பேசப்படுவதும் பேசப்படாததும்
பேசப்படாததை பேசாமல் இருப்பதுவும்
என்றவாறெல்லாம் பேசிப்பேசிப்
பேச்சுத் தொடர்கிறது
பேசுவது பற்றி.....

தெ. சாவசீர்த்தி மீநிலங்கோ.
நிலை -3
சடத்த்துறை
சமூக விஞ்ஞான பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைப்பாக்கத்தில் ஓவியம்

ஓவியம், சிற்பம் என் விரிவன கலை வடிவங்கள் ஆகும். கலை சிந்தனை வெளிப்பாடு ஆகும். கலைஞனுக்கு இருக்கும் ஆற்றலை வெளிப்படுத்தும் ஊடகத்தை கலை, ஓவியம், இசை, சிற்பம், நடனம் எனப் பல்வேறு வகையில் வெளிப்படுத்திப் படைக்கலாம். அந்த படைப்பின் உள்ளடக்கம் பல்வேறுபட்டது. கலைப்போக்குகளும் பல்வேறுபட்டவை.

கலை சலைக்காக, கலை சமூகத்துக்காக என்னும் கருத்துக்கள் இந்நிலையிலே வெளிப்படுகின்றன.

கலையைப் படைப்பவன் வேறு ஒரு கிரகத்தில் இருந்து முளைப்பவன் அல்ல. இவ் உலகில், மனிதரில் இருந்து தோன்றியவன்.

கலை மண்ணைப் பற்றி பேசவில்லை என்பவர் கலை கலைக்காவே என்று கூறுவர். மண்ணைப்பற்றி பேசுகிற ஊடகம் என்பவர் கலை சமூகத்துக்கு என்பர்.

இங்கு கலைஞன் என்பவன் முதலில் மனிதன். மனிதனுக்குப் பிறகுதான் கலைஞன். வாழும் சமூகத்தில் ஒருவனைத் தாக்கும் அவன் அறியும் செய்தி என்பன அவனை மனிதனாக்குகின்றன. அதன் வெளிப்பாட்டை அவன் காட்டும் பொழுது அவன் கலைஞன் ஆகிறான். அந்த வெளிப்பாடு கலையம்சம் கொண்டதாக இருக்க வேண்டும்.

கலைஞன் என்பவனுக்கு தாக்கம் குறைவு சகபாடிக்கு ஏற்படும் உணர்வை உணர்ந்து அதை வெளிப்படுத்தும் திறனுடையவன் கலைஞன். ஒரு ஓவியனுக்கு இருக்க வேண்டிய தகுதி என்னவென்றால் முதலில் மனிதனாக இருக்க வேண்டும். எதற்கும் மனிதன் என்பது அடிப்படை மனிதன் என்பதால் தான் உலக நிகழ்வைப் பார்த்து உணர்ந்து அது வெளியாகும் போது கலை வடிவமாக வெளிவர அவன் கலைஞன் ஆகிறான்.

ஒரு படைப்பு என்பது வரலாற்று ஆவணமாக இருக்க வேண்டும் பிகாசோவின் ஓவியம் ஒரு பெரிய வரலாற்று ஆவணம். (மோனேலிசா) இது எதிர்கால சந்ததிக்கு வழிகாட்டக் கூடியதாக இருக்கும். படைப்பின் உச்சம் அதுதான். அது வரலாற்றாவணமாக இருக்கும் அதே வேளை வழிகாட்டியாகவுமுள்ளது.

படைப்புக்கு ஒரு நோக்குண்டு; அது படைப்பாளிக்கு முண்டு; இலக்கை நோக்கி நகர்கின்ற ஒன்றுதான் படைப்பு அப்பொழுதான் அவன் படைப்பாளி;

எந்த ஒரு படைப்பாளியும் நெறிப்படுத்தப்பட்ட பயிற்சியை பெற்றிருப்பான். அவ்வாறு நெறிப்படுத்திய பயிற்சி ஒருவனை இன்னும் அவன் தளத்தில் இருந்து விடுவித்து இன்னோர் தளத்துக்கு இட்டுச் செல்லும்.

ஓவியத்தின் அடிப்படை என்ன? அடிப்படை ஆர்வம். அவ்வாறு ஓவியம் தீட்டுவதற்கு அடிப்படை கோடுகள். கோடுகள் தான் அடிப்படை என்றால் எத்தனை வகையான கோடுகள் உண்டு. நேர்கோடு இடைக்கோடு, வளைகோடு, அலைக்கோடு எனும் நால்வகை அதிலிருந்து வேறுகோடுகள் பிறக்கும். இவையின் தன்மை தடித்தவை, மெல்லியவை என்பன ஆகும். அடிப்படைக் கூறு இவை கோட்டோவியம் செய்யப் போதும். இவை இரு பரிமாணத்துக்கு மட்டும்தான் முப்பரிமாணத் துக்கல்ல.

எப்படி ஒரு பொருள் இருபரிமாணத்தில் செய்ய தன்மை முக்கியமோ அதுபோல் முப்பரிமாணம் ஆக்குவதில் "கிரிடேசன்" தேவை அது முக்கியம்.

இயற்கை காட்சி புடிச்சது அது எழிது ஆரம்பத்துக்கு தான் வரைய நினைத்து வரையிரது வந்துவிட்டது என்னும் நம்பிக்கைதான் வேணும் "மு" அவனுக்கு முதல் கவனம் அது சிதரக் கூடாது. மனம் இல்லாமல் Concentration onpersion வராது. அவதானித்தல், உள்வாங்கல், வெளியிடுதல் இவை முக்கியம் அழுதபிள்ளை பால்குடிக்கும் கூட கலைப்படைப்பு உண்டு தீட்டும் போது paper இருக்கவேணும் கைதான் வளைய வேணும் அதுவும் மணிக்கட்டு இவைமுக்கியமாகும்.

N.Jegathesuaera sharma



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from*



## V.N.T VIDEO AND COMMUNICATION CENTER

**79/A, Sea Street**
**Negombo**
**Van for hire**
**T.P: 0777 110983**
**031 - 2220989**

*With Best compliments from*

## SARASAVI STATIONERY

Dealers in Stationery - from Montessori to office
11, Maliban Street,
Colombo - 11,
Sri Lanka.
Tel: 2390540, 2390541
2541458
Fax: 2541458

*With Best compliments from*

## UNITED STATIONERY

Dealers in:
**All Type of Office Stationery**
**Photo Copy Papers & Toners**
**Computer Stationery, Fax Paper & Cartridges, Laser Printer Toners & Injet Cartridges, Electronics typewriter Ribbons, Garment Accessories**
23, Maliban Street, Colombo - 11
Tel: 2543744, 2345150
Fax: 2345150

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best compliments from*

## Yale Restaurant

**யாழ் உணவகம்**

யாழ் முறையில் தயாராகும்
சகலவிதமான சைவ அசைவ
உணவு வகைகள்
ஞாயிறு ஸ்பெசல்
ஒடியக் கூழ்

356, Galle Road,
Colombo - 06,
Sri Lanka.
Mob: 072-3396705

*With Best compliments from*

## APPOLO OPTICIAN

*Eye Testing & Dispensing*

317. B, Galle Road,
Wellawatte, Colombo - 06
Tel: 4516609

*With best compliments from*




## AKIILAAM TAILORING

(Ladies Only)
# 303, Mannar Road,
Paddanichchoor,
Vavuniya.
Tel: 077-6106717

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரதி பென்ஸி கவுஸ்
# Rathy Fancy House

அன்பளிப்புப் பொருட்கள்
சகல விதமான மணிக்கூடு வகைகள்
லேஸ் வகைகள், நூல் வகைகள் பட்டின்
கிறீம் வகைகள், நகப்பூச்சுக்கள்
அனைத்தும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

53, Model Market-Jaffna
53, நவீன சந்தை, யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best compliments from*

## SAFRAZ TRADERS

Dealers in imitation jewellery & bangles
& fancy goods

#116/3, 116/4, 116/5,Prince Street,
Colombo 11
Tel: 2449751,
Res : 2699945,
Fax : +94-11-2449751,
ATTN : SAFRAZ

*With Best compliments from*

## OXFORD FASHION

Import & Dealers in imitation jewellery
Fancy Goods Cosmtics & Sunglass

#108 A, Prince Street,
Colombo 11
Tel: 0094 11 2449713
Fax : 0094 11 2327075
Mobile : 0777 725490.
E-mail :oxfordfashionkm@yahoo.com

*With Best compliments from*

## T.M.B. ENTERPRISE

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

**No. 18, FOURTH CROSS STREET.**
**COLOMBO - 11.**
**Phone: 2338239**

*With Best compliments from*

## UMESH TRADER

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

No. 24, 4th Cross Street,
Colombo - 11.
Tel: 329891

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசுதேவன் வகுத்த வழி

அத்தினாபுரத்துக்கு சமாதான பேச்சுவார்த்தை நடத்த, கிருஷ்ணன் சென்று திரும்பி விட்டான்.

கௌரவர்கள் சமாதானத்தை விரும்பாமல் போர் முனையில் பாண்டவர்களைச் சந்திக்க முடிவு தெரிவித்து விட்டனர்.

குருசேஷத்ரப் போருக்கு ஆயத்தம் இருதரப்பிலும் தொடங்கி விட்டது. ஒவ்வொரு தரப்பினரும் தங்கள் தங்கள் படைபலத்தைப் பெருக்க பற்பல தேசத்து மன்னர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தனர்.

உபப்பிலாவியம் என்ற நகரத்தில் பனிரெண்டு ஆண்டு வனசாசமும் - ஓராண்டு அஞ்ஞாத வாசமும் முடிந்தபின், பாண்டவர்கள் தங்கள் பந்துமித்ரர்களுடன் மந்த்ராலோசனையில் ஆழ்ந்து இருந்த காலகட்டத்தில்....

ஒரு மாலை வேளையில்.....

"சகாதேவா! உன் மாமன் சல்லியனுக்கு ஆள் அனுப்பினீர்களா?" என்று வாசுதேவன் திடீரெனக் கேள்வியொன்றைக் கேட்டான்.

"அவரை மறந்தே விட்டோம். மந்திராதிபதிக்கு மந்த்ராலோசனைக் கூட்டத்திற்க அழைப்பளிக்காதது மிகப்பெரிய தவறுதான். இப்பொழுதே அண்ணனிடம் கூறி நகுலனை அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டும்."

"மாத்ரி புத்ரனே! காலம் கடந்து விட்டது! உங்கள் அழைப்பை எதிர்பார்க்காமல் உங்கள் பக்கம் துணையாக நிற்க, தன்னுடைய மிகப் பிரும்மாண்ட நால்வகைச் சேனைகளுடன் புறப்பட்டு வந்து கொண்டிருக்கிறார்.... ம்... ஆனால்.... ஆனால்...." என்று சொல்லிக் கொண்டே துவாரகாநாதன் தன் முகத்தை வேறு திசையில் திருப்பிக் கொண்டார்.

"கண்ணா! நீ சொல்வதைப் புரிந்து கொள்ள முடியவில்லையே... ஆனால் என்று மறுபடியும் மறுபடியும் கூறுவதின் அர்த்தம்..." என்று பதைத்துப் போய் கேட்டான் பாண்டவர்களின் இளவல்.

"வேகமாக படைகள் வந்து கொண்டிருக்கும் வழியில்..." அச்சுதன் அப்படியேததான் சொல்ல வந்ததை நிறுத்திக் கொண்டான்...

படைகள் வரும் வழியில்...

மந்திராதிபதி சல்லியனுக்கும் அவனுடைய படைகளுக்கும் ராஜோபசாரம் நடத்தப்பெற்றது.

சூழ்ச்சியில் வல்லவனான சகுனியின் சதித்திட்டத்தின்படி, துரியோதனனின் ஆட்கள் பலர் படைகளுக்குத் தேவையான ஆகாராதிகளையும், வீரர்களுக்கு வேண்டிய பானங்களையும் அபரிமிதமாக அளித்து உபசரித்தார்கள். வணக்கத்துடனும், பணிவுடனும் இன்சொல்லால் யாவரையும் கவனித்துக் கொண்டார்கள்.

இரவில் தங்குவதற்கு வசதியும், கேளிக்கைகளும் அமைத்திருந்தார்கள்.

கடலைப் போன்ற பெரிய படையைக் கச்சிதமாகக் கவனித்துக் கொள்வது யாரெனத் தெரிந்து கொள்ள சல்லியன் அவாவுற்றான்.

உபசரிக்கும் கும்பலினுள் ஒருவனிடம், "வீரனே! உங்கள் விருந்தோம்பலில் என் மனம் மகிழ்கிறது. நன்றி கூற மனம் விழைகிறது... உங்கள் தலைவனை அழைத்து வா... அவனைக் காண விரும்புகிறேன்... என்று கூறினான் சல்லியன்.

விரைந்தான் வீரன்.

அடுத்த சில வினாடிகளிலேயே, மந்திராதிபதியின் முன், துரியோதனனும் சகுனியும் தோன்றினார்கள். அதிர்ச்சியடைந்தான் சல்லியன்.

"என்ன நீயா?..."

"ஆமாம்! நானேதான்" என்று அடக்கத்துடன் பணிவாகப் பதிலளித்தான் துரியோதனன்.

"யுதிட்டிரன் பக்கம் சேர்ந்து யுத்தம் புரியச் செல்லும் என் படைகளுக்கு, பாண்டவர்களின் ஜன்மப் பகைவனான, திருதராட்டிரன் மகனான துரியோதனன், வரவேற்பும், உபசரிப்பும் செய்கிறானென்றால் ஆச்சரியமில்லாமல் என்ன?"

"மந்திராதிபதி மன்னரே! பகைமை, சகோதரர்களாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுக்குத்தான், அவர்களுடைய உறவினர்கள் எங்கள் பகைவர்கள் அல்ல... ஏன் தருமனின் தாய் குந்தி தேவி, அத்தினாபுரத்தில் எங்களுடன் தானே தங்கி இருக்கிறாள்."

"ஆமாம்! நீ சொல்வதிலும் உண்மை இருக்கிறது... இருந்தாலும்.... போர் என்று முடிவு செய்துவிட்ட பின்...."

"சல்லிய ராஜனே! போர்வரப் போகிறது என்பது திண்ணம். நீங்கள் படைகளுடன் அழைக்கப்படாத விருந்தாளியாகப் புறப்பட்டு வந்து கொண்டிருக்கிறீர்கள்... மனிதாபிமானம் கொண்ட எங்கள் அரசன் துரியோதனன் தங்களுக்கு சகல உதவிகளும் செய்து தருமாறு ஏற்பாடு செய்தான்... இதில் பகையைப் பார்க்கவில்லை நாங்கள்...." என்று காந்தார நாட்டுக் கயவனா சகுனி, சமயம் பார்த்து, சல்லியனைச் சலனப்படுத்த முயன்றான்.

"ஆமாம்! ஆமாம்! நான்தான் பாசத்தின் உந்துதலில் புறப்பட்டேன்.... நகுல சகாதேவர்களின் தாய் மாமன் என்ற உரிமையில்தான் அழைப்பில்லாமலே..."

"அதனாலென்ன... சமயா சமயங்களில் உறவுதானே உதவிக்கரம் நீட்ட வேண்டும்... அது உங்களின் பரந்த உள்ளத்தின் சிறப்பம்சம்..." என்றான் சகுனி.

"எங்கள் சிற்றன்னை மாத்ரி தேவியின் சோதாரண நீங்களும் எங்கள் மாமன்தானே. நானும் உங்கள் உறவுதானே..." துரியோதனன்.

"உண்மைதான்... துரியோதனா! நீ மாறுபட்ட கோணத்தில் இப்பொழுது தோன்றுகிறாய்?" என்றான் சல்லியன்.

"மாமா! அது என்ன புதுக்கோணம்?" ஆவலாய்க் கேட்டான் அரவக் கொடியோன்.

"துஷ்டன், துர்புத்தியுள்ளவன் என்றெல்லாம் உன்னைப் பற்றிக் கேள்விப்பட்டேன்.... ஆனால்... காந்தாரி புத்திரனே! இன்று நான் காண்பது முற்றிலும் மாறானது...."

"மாபெரும் சேனையையுடைய மந்திரநாட்டு மாமன்னரே! கண்ணால் நீங்கள் நேரில் காண்பதே நிஜம்... காற்றில் பறந்து வந்து உங்கள் செவிகளில் விழுந்த செய்திகள் கோள் சொல்பவர்களின் கற்பனை... சுவேதனன் சுய நலமற்றவன், துரியோதனன் தூயவன், மனிதாபிமானம் உடையவன், மாமனை மதிக்கும் உறவினரின் தரம் தெரிந்திருக்கும் தயாளன்...." என்றெல்லாம் சகுனி துரியோதனனின் புகழ்பாடி, சல்லியனைக் குழப்பதிலாழ்த்தினான். மேலும் தொடர்ந்தான்:

"சொந்தத் தாய் மாமனை மந்த்ராலோசனைக்குக் கூப்பிட மறந்துவிட்டார்கள் குந்தி புத்திரர்கள், தங்களைக் கலந்து ஆலோசியாமல் துருபதன் மகனைப் படைகளுக்குத் தலைமைதாங்க, சேனாதிபதி பட்டம் சூட்டிவிட்டார்கள்.... எங்கள் ஆசார்யரான துரோணரிடம் தோல்வியுற்றவனின் மகன் சேனாதிபதியாம்...சிரிப்பதா...அழுவதா? அதிரதர், மாரதர் தோல்வியே காணாத மாமன்னர், பரதகண்டத்திலேயே மிகப்பெரிய படைகொண்ட பராக்கிரமசாலியான மந்திராதிபதியை மதித்துத் தலைமை தாங்க வேண்டிக் கொள்ளாமல் உதாசீனப்படுத்தி விட்டார்களே பாண்டவர்கள்..." என்று கூறினான் சகுனி. அவனுடைய ஒவ்வொரு சொல்லுக்கும் நடுவே விஷம் தோய்ந்திருந்ததை, சஞ்சலமடைந்த சல்லியன் புரிந்து கொள்ள இயலாமற் போக... நச்சு கலந்த நயவஞ்சக வார்த்தைகளால் மனம் தளர்ந்தான்.

பாண்டவர்களின் உதாசீனம்...
கௌரவர்களின் உபசாரம்...
தராசு தடுமாறியது...

உபசரிப்பினால் உள்ளம் மகிழ, நன்றியுணர்ச்சியால் நெஞ்சம் நெகிழ... சல்லியன் துரியோதனனின் கைகளைப் பற்றியவாறே கூறினான்.

"திருதராட்டிரன் புத்திரனே! உன் உபசரிப்பில் மகிழ்ந்தேன்....
உனக்கு வேண்டியதைக் கேள்...."

பெண் வாழ்வின் புதைகுழியாய் மாறிவிட்டது சீதனம். அதிலும் ஏழைப் பெண்களைப் படுகுழியில் தள்ளி முதுகன்னிகளை உருவாக்க விதையாக விழுந்தது. மணமகன் வீட்டாருக்கு மட்டற்ற மகிழ்ச்சி. பெண் வீட்டருக்கோ சொத்துக்களை வித்து சுட்டதில் தளர்ச்சி. ஊராரின் பகட்டுக் கண்களுக்கு மலர்ச்சி. இத்தனைக்கும் மூலகாரணம் தான் என்ன? சீதனம் என்பது என்ன? அது வளர்ந்து அரக்கனானது எப்படி? சிந்தித்தது உண்டா? இல்லை நீங்கள் நிச்சயமாக சிந்தித்து இருக்க மாட்டீர்கள். பகுத்தறிவை பறிகொடுத்தவர் மற்றவர் சொற்படி நடப்பவர். சுயமாகச் சிந்தித்திருந்தால் எமக்கும் இவ்வாறு வரலாம் என எண்ணி இருந்தால் சீதனத்தால் சிதைந்த பெண்களின் வாழ்வில் வசந்தம் வீசியிருக்குமே.

தற்காலத்தில் சீதனம் பேரம்பேசி பெண்வீட்டாரிடம் பெற்றுக் கொள்ளும் ஒரு முதலீடு ஆகிவிட்டது. பெண்ணின் மீது நேரடியாக ஏற்படுத்தப்படும் வன்முறை போல சீதனமும் பெண்களுக்கு எதிராக சமூதாயமாகச் சேர்ந்து கட்டவிழ்த்து விட்டிருக்கும் ஒரு நிழல் வன்முறையாகும். திருமணத்தின் பின்னும் கூட இதன் பிரதிபலிப்பு காணப்படுகிறது. இதனால் சில பெண்கள் தற்கொலை வரைக்கும் போயிருக்கிறார்கள்.

இவ்வாறு சீதனம் கொடுமையாக மாறியதற்கு ஒருதலைப்பட்சமாக ஆண்களைக் குறை கூறிவிட முடியாது. ஒரு ஆண் தான் காதலித்த பெண்ணை திருமணம் முடிப்பதில் கூட தனித்து முடிவெடுக்க முடியாது உள்ளது. காரணம் அவனது பொறுப்புக்கள் கல்வித் தகைமைகள் என்பவற்றினால் சீதனம் பெறப்பட வேண்டும் என்ற தாய், தந்தையின் அழுத்தத்திற்கு உள்ளாகின்றான்.

செல்வந்த வீட்டுப்பெண்கள் மருத்துவர், பொறியியலாளர் என மணமகன்களைத் தேடும் போது அதிக சீதனம் கொடுத்து திருமணம் முடிப்பதால் போட்டி அதிகரிப்பதோடு சீதனம் வாங்க வேண்டிய நிலைப்பாடு உருவாகிறது. பெண்களுக்கு ஜாதகப்பிரச்சினை, காதல் தோல்வி போன்ற பிரச்சினை இருப்பின் அவர்கள் அதிக சீதனம் கொடுக்க வேண்டியுள்ளது. இவ்வாறு ஆண்கள் சீதனத்தைக் குறைத்து கொள்வதில்லை. சீதனம் வாங்காது திருமணம் முடித்தால் அது கௌரவம் இல்லாத செயல் என ஆண்களின் மத்தியிலும், சீதனம் கொடுக்காது திருமணம் முடித்தால் தாம் கௌரவமாக வாழமுடியாது என பெண்கள் மத்தியில் ஒரு தவறான அபிப்பிராயம் நிலவுகின்றது. இன்று சமுதாயத்தில் ஆண் ஒருவர் சீதனம் இல்லாது திருமணம் முடிக்க வருவாரானால் அவருக்கு ஏதோ நோயோ, குறைபாடு உண்டு என அவரை நிராகரிக்கின்றனர். இதனால் இன்று ஆண்கள் சீதனம் இல்லாது திருமணம் முடிக்கத் தயங்குகின்றார்கள்.

பெண்களைப் பெற்ற பெற்றோர்கள் சீதனம் கொடுக்க வேண்டிய நிலையில் இருப்பதால் சீதனம் சேர்க்க வேண்டும் என்று சிக்கன வாழ்க்கை மேற்கொள்வதுடன் எவ்வித முன்னேற்றமும் இன்றி வெறும் பணம் சேர்க்கும் இயந்திரங்களாகவே காணப்படுகின்றார்கள்.

இன்று எம்மத்தியில் பெண்குழந்தை ஒன்று பிறந்து விட்டால் "ஐயோ பெண்ணா?" என்று கேட்கும் அளவுக்கு இந்தச் சீதனமானது சமுதாயத்தை பாதித்து விட்டது.

**பிரதீபா**
இயற்கை விஞ்ஞானபீடம்

## Secret...

வெண்மையானவளே...
நீ அழகானவள் தான்
உள்ளே தான் நஞ்சு!
என் உதடுகள் உன்னை
முத்தமிடும் வேளையில் சிவந்தே போகிறாய்.
அது அன்பின் குறியல்ல
அபாய அறிவிப்பு!!!

புகைந்து கொண்டிருப்பது
நீ மட்டுமல்ல - என்குடும்பத்தவர்
வயிறும் தான்

வெண்மையானவளே சென்றுவிடு
Please என்னை விட்டுவிடு!

**ஏ. ஜஸ்டின்**
பொறியியல் தொழில நுட்பபீடம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ உலகில் இரசாயன - பௌதீகத் திருப்பம்

மருத்துவ உலமானது உலகம் தோன்றியது முதல் பல விந்தைகளைப் புரிந்தவண்ணம் உள்ளது. அவ்வகையில் பல புதிய கண்டுபிடிப்புக்கள் எம்மை வியக்க வைக்கும் அளவிற்கு உருவாகி வருகின்றன. இவற்றில் பொதுவாக "லூயிஸ் பாஸ்டர்" என்னும் விஞ்ஞானியின் "நுண்ணுயிரியல்" எனும் பகுதியே விசேட பல திருப்புமுனையை ஏற்படுத்தியது என்றால் மிகையாகாது.

எனினும் இவ் நுண்ணுயிர்களின் தாக்கம் உடலின் உள்ளும் வெளியேயும் பல வித்தியாசமான தாக்கங்களையும் மாற்றங்களையம் ஏற்படுத்திய வண்ணம் காணப்பட்டது இத்தாக்கங்ளை வெளி அறிகுறிகளைக் கொண்டு மட்டுமே அன்று நோய்களுக்கு நிவாரணங்களை வழங்கக் கூடியதாகக் காணப்பட்டது. இக் குறைபாடு நோய்களை குணமாக்குவதற்கு பெரும் சவாலாக அமையப் பெற்றிருந்தது.

இந் நேரத்தில் தான் ரோஞ்ஞன் (Rongen) போன்ற விஞ்ஞானிகளால் கண்டறியப்பட்ட கதிர்களின் கண்டுபிடிப்பும், அவற்றின் பயன்பாடும் மருத்துவ உலகை ஒரு திருப்பு முனைக்கு இட்டுச்சென்றது. இதற்கு முக்கிய காரணம் என்னவெனில் கதிர்களின் தூர நோக்கப் பயணம்; தனித்தன்மை; ஊடுருவும் தன்மை; குறிப்பிட்ட புள்ளியை நோக்கிய செறிவான குவியம்; உடலின் உள்ளுறுப்புக்களைத் திரையில் காண்பித்தல் போன்றவையாகும்.

இவ்வகையில் விஞ்ஞானிகளால் அறிமுகப்டுபத்தப்பட்ட கதிர்த்தாக்கங்களே பயன்படுத்தப்படுகின்றன. அதாவது மறை ஏற்றத் துணிக்கைகளாலான இலத்திரன்கள் செறிவு மிகக் கூடிய காந்தப்புலத்தில் அனுப்பப்படும் இதன்போது உருவாகும் காந்த இலத்திரன் விளையுளின் திசையில் இச்சக்தி கூடிய இலத்திரன்கள் மிகக்கூடிய விசையில் பயணித்தன. இவ் விளையுள் விசை spin என்று அழைக்கப்படும். இவை உடல் கலங்களில் காணப்படும் நீர் மூலக்கூறுகளுடன் தாக்கப்பட்டு ஐதரசன் அயன்களை தோற்றுவிக்கும் இவை திரையில் விம்பமாக வீழ்த்தப்பட்டு பதிவு செய்யப்படும். எனினும் இதில் தெளிவில்லாத விம்பங்களும் பெற்றப்படன. இது Blure எனப்பட்டது. எனவே இக்குறைப்பாடுகளை நிவர்த்தி செய்ய பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது x-கதிர்கலமாகும்.

இலத்திரன் கதிர்கள் அதிவேகமாக பயணித்து சில உலோகங்களுடன் மோதலில் ஈடுபடும் போது சக்தி, கூடிய x கதிர்கள் பெறப்படுகின்றன x கதிர்கள் அதிகூடிய மீடிறன் சக்தி ஊடுருவும் தன்மை கொண்ட திணிவு குறைந்த ஏற்றமற்ற துணிக்கைக்கலமாகும். இவை மனித உடலில் செலுத்தப்பட்டு மிகுதி யாக வெளியேற்றப்படும். கதிர்கள் விசேட ஒளிப்படத் தாளில் பிரதி செய்யப்படுகின்றது. இப் படத்தாள் பல சிறிய உலோகத்தகடுகளை இடையிடையே கொண்டு காணப்படும். இத்தகடுகளில் மோதப்படும் x-கதிர்ரே உடலின் விம்பங்களைத் தோற்றுவிக்கின்றன. இக் கதிர்கள் grid எனப்படும் மெல்லிய புள்ளிக்கூடாகவே குவிக்கப்படுகின்றது. எனினும் x-கதிர்களைக் கொண்டு இரு பரிமாண முறையில் மாத்திரம் விம்பங்கள் பெறப்படுவது ஒரு குறையாகவே காணப்பட்டது.

இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டதே CT-Scanning (computer tomogrphy) இதன் விசேட அம்சம் என்னவெனில் உடலில் செலுத்தப்படும் x-கதிர்கள் முதலில் இரசாயண-பௌதீக முறையில் பதப்படுத்தப்பட்டு உடல் கலங்களுக்கு தாக்கம் ஏற்படாதவாறு செலுத்தப்படும். பின்னர் இவை கணணி இயந்திரத்திற்கு தொடர்பு படுத்தப்படுகின்றது. எனவே இங்கு பெறப்படும் விம்பமானது முப்பரிமாண முறையில் பெறப்படுகின்றன. அத்தோடு உள்ளுறுப்புக்களின் அசைவுகளையும் அவதானிக்கக் கூடியதாகக் காணப்படுகின்றது. இம்முறையில் மிக நுண்ணிய கதிர்கள் செலுத்தப்படுகின்றன. இவை Pencil-like-beams என அழைக்கப்படுகின்றன. இவை மனித உடலின் உள்ளுறுப்புக்களை முப்பரிமாண முறையில் சுற்றுவதன் மூலம் இவை முப்பரிமாணப் புள்ளிகளை உருவாக்கு கின்றன. இப்புள்ளிகள் grid-points என அழைக்கப் படுகின்றன. இப்புள்ளிகளின் உதவியினால் மிக நுண்ணிய நரம்புக்கலங்களையும் நுண்ணியக் கலங்களையும் மூளையில் காணப்படும் வெண்பகுதி, சாம்பல் நிறப்பகுதிகளை இலகுவாக நிறம்பிரித்தறியக் கூடியதாக காணப்படுகின்றன. எனவே இவை மருத்துவ உலகில் மிகப் பெரிய திருப்புமுனையை ஏற்படுத்தி யுள்ளன.

இவை அனைத்திற்கும் விஞ்ஞானத்தின் இரசாயன-பௌதீக இயல்புகளையும் இவற்றை ஏற்படுத்தும் இலத்திரன்கலும் ஏனைய கதிர்களுமே திருப்பு முனையாக அமைந்துள்ளன என்பது உண்மையே.

G.S.ஜோன்சன்
இ.விஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரைப்பட வல்லுனர்கள்


இடம் கண்ட பூனை போல
இந்தியாவில் சில நரிகள்
ஆபாசப் படங்களை எம்மவர்க்கு
பகிரங்கமாய் காட்டுதுகள்!

முறைப்படி நாம் எடுத்த
தமிழ்த் திரைப்படம் என்றுரைத்து
கலர்ப்படங்கள் காட்டுமெங்கள்
திரைப்பட வல்லுனர்கள்!

முதிர்ச்சியின் மறுமுனையில்
கவர்ச்சியும் இருப்பதனால்
பரித்தியின் வாரிசாக
வருத்திய வாழ்க்கையாச்சு!

இளவட்டம் இவர்களைத் தான்
இளவரசி எனநினைத்து
கனவுலகில் மிதந்து - சில
தவறுகள் செய்யுதுகள்!

ஏ. ஜஸ்டின
பொறியியல் தொழில நுட்பபீடம



## கண்ணுக்குள் ஓர் நிலவு....

கண்ணுக்குள் ஓர் நிலவு - அது
நீயாக வேண்டுமென்று நீண்டநாள் ஆனது..
எண்ணத்தில் ஓர் கனவு அதுவும் நீயாக
வேண்டுமென்று காலம்கடந்த ஆசை...

நினைவுகளின் சங்கமத்தில்
நிஜங்களின் போராட்டத்தில் - உன்
நிழலினைப் பிடித்து வைத்தேன்.

சுழன்றிடும் சிந்தனையில்
சிரித்திடும் ஓவியமாய்
சிறைப்பிடித்து அடைத்து வைத்தேன்

கனவினில் கதைபேசும் - உன்
கருவிழிப் பார்பையினை
கவிதையாய் மடித்து வைத்தேன்

உயிர்துடிக்கும் வினாடியெல்லாம்
உனைச் சேர்ந்திருக்க மனம் துடிக்கும்
மயிர் இடை வெளியில் மரித்து விட்டால்
மரித்து விட (என்) மனம் வெடிக்கும்
உன் மடிதனிலே மரிப்பதென்றால்
மரணம் கூடப் பெரிதில்லை.

விடிகாலை வேளையிலும்
உனை விட்டு விட விருப்பமில்லை
உன்னிடத்திலிருந்து இதயம் எதையோ
எதிர்பார்க்குதடி!

புதிரல்ல புதுமையிது
உனக்குள் நான் - அந்த
நிலவின் காட்சியிலே

கண்டது கனவென்று
கதிரவன் சிரித்திட
தலை கவிழ்ந்தேன் - நாணத்தில்

நாளைய நிசியினில்
கனவுகள் நிஜமாக
காத்திருந்தேன் நிலவுக்காய்.

ஏ. ஜஸ்டின்
பொறியியல் தொழில நுட்பபீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Micom

**Since 1997**

வகுப்புக்கள் உடனடியாக ஆரம்பிக்கப்படும்

## COMPUTER COURSES

| | | | |
|---|---|---|---|
| Diploma in Microsoft Office Rs.3900/= | Diploma in Desktop Publishing Rs.5000/= | Diploma in Web Designing Rs.7500/= | Diploma in Programming Rs.6500/= |
| Diploma in Multimedia Rs.7500/= | Web Designing Rs.5500/= | Turbo C++ Rs.4000/= | Visual Basic 6.0 Rs.5000/= |
| Java Language Rs.6000/= | C Language Rs.3500/= | Visual Basic. NET Rs.5000/= | ASP. NET Rs.5000/= |
| C#. NET Rs.5000/= | Visual C++ Rs.6000/= | Computer Hardware Rs.4500/= | AutoCAD (2D Construction) Rs.4500/= |
| Networking Rs.7500/= | Internet & E-mail Rs.3500/= | Graphic Designing Rs.5500/= | Macromedia Flash MX Rs.3000/= |
| 3D Studio Max Rs.4500/= | SQL Server Rs.5500/= | Oracle 9i Rs.7500/= | Tally Rs.4000/= |

## PROFESSIONAL COURSES

| | | | |
|---|---|---|---|
| Diploma in Computerized Accounting | Rs.6500/= | Windows Administration | Rs.7500/= |
| Sun Certified Java Examination | Rs.7500/= | Linux Administration | Rs.9000/= |
| Diploma in. NET Terminology | Rs.12000/= | AutoCAD 2000 (3D Modeling) | Rs.6500/= |
| Diploma in Visual Engineering | Rs.15000/= | MCP | Rs.9000/= |

இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்

**Micom**

International College of Law, Business and Computer Studies

242-3/1, Galle Road, Colombo - 06, Tel : 2588264,

E-mail : micomcollege@hotmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best compliments from*

# SRIS COMMUNICATION

**KURUMANKADU, VAVUNIYA**
T.P: 024-2222534, 024-2222386
FAX :024-2222709, 024-2222466

# CALL SHOP

Communication & Travels Airline Ticketing
Net 2 Phone, Local & IDD Phone Calls

No. 479, Galle Road, Wellawatte,
Colombo - 06

Tel: 5 551492
Fax: 5 551491
Mobile: 077 732 9892

# Jewel Plaza

Specialist in Finest Quality and
Latest Jewellary

No. 373, Bazaar Street,
Vavuniya
Tel: 024 222 2392

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய சினிமா

சினிமா
விஞ்ஞான தேவதை
கையில் ஏந்தி நிற்கும்
கலாதீபம்!

இந்த தீபத்தை
விட்டில்கள்ளல்ல
நட்சத்திரங்களே மொய்க்கும்

இந்தத் தீபம்
சில சூரியன்களை ஈனும்
சுயபலம் வாய்ந்தது

நேற்றுப் புதிதாய்
சிலேட்டு பிடித்த
சிறுவன் மாதிரி
நம் வாழக்கையின்
பல பிரதேசங்களை - இது
கிறுக்கி வைத்திருக்கிறது!

நம்மூர்த் தாமரைகள்
இன்று
சூரியனை பார்த்தல்ல...
திரைப்பாட்டின்
மெட்டுக்கள் கேட்டே
மொட்டுக்கள் விரிக்கும்

பட்டணத்து குழந்தைகள்
தாயின் தாலாட்டு கேட்டால்
ஒப்பாரி வைக்கும்!
திரைப்பாடல்
காதில் விழுந்தால் தான்
கண் வளரும்!

சினிமாச் சுவரொட்டிகள்
கல்லறையின் மீது தவிர
ஒவ்வொரு சுவரிலும்
ஒட்டப்பட்டு விட்டன!

இன்று ஓட்டுப்பெட்டிகளையும்
சவப்பெட்டிகளையும் கூட
படப்பெட்டிகளே தீர்மானிக்கும்
தேனின் சத்தும்
விஷத்தின் வீரியமும்
சேர்ந்த கலவையே சினிமா!

இது மௌன புரட்சிகளின் மையம்
இந்த யுகத்தின்
சீதனம் இந்த சாதனம்

பொழுது போக்கு என்னும்
போர்வையில்
நம் கலாசாரத்தை
நாசமாக்கி விட்டோமா?
ஒரு
தங்க மீனுக்காக தூண்டிலில்
தவளை பிடித்துக்கொண்டிருந்தோமா?
ஒரு
நவீன இலங்கையின் புலர்வுக்கு
இந்த
கலையில் வெளிச்சம்
கசியாதா?

கவலைப்படத் தெரியாத
கலைகள்
கலைகளின் களைகள்
திரைப்படம்
இருட்டில் காட்டப்படுவதாய்
இருக்கட்டும்!

ஆன ு - அது
வாழ்க்கையின் வெளிச்சத்தில்
எடுக்கப்படட்டும்.

காயத்திரி சிறிஸ்கந்தராஜா
இயற்கை விஞ்ஞானபீடம்
மட்டம் - 5


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராமர்களுக்கு இன்று ரத்தமில்லை

வைகாசி வந்தால்
முப்பத்து மூன்று
முடிகிறது அவளுக்கு

அவள் திருமணத்தை
நிச்சயிக்க நினைத்த
நாளில் மட்டும்
சொர்க்கத்திற்கு விடுமுறைபோலும்.
அவள் பெயரை
கல்யாண பத்திரிகையிலேனும்
அச்சில் பார்க்க
அவள் ஆசைப்பட்டாள்

ஆனால்
அச்சு எந்திரங்களைப் போலவே
மனித எந்திரங்களுக்கும்
மனசுகள் இல்லை.

பாவம்!
தன் கண்ணீர் முத்துக்களை
கோக்கத்தான்
நொந்து நொந்து அவள்
நூலாய் இளைத்தாளோ?

மாலையிட மாட்டார்கள்
ஆனால் எல்லா வாலிபரும்
அவளை
பெண் பார்ப்பது போல் தான்
பார்க்கிறார்கள்.

பூக்களை இன்றும் தான் சூடுகிறாள்
இது தான் விதவையல்ல என்று
வெளிக்காட்ட மட்டும் தான்

முன்பெல்லாம்...
கனவுகளுக்காகவே
உறங்கினாள்

இப்போதோ
உறக்கமே ஒரு கனவாகிவிட்டது

இப்போது
அசையாமல் உட்கார்ந்து
ஜன்னலுக்கு
தானும் ஒரு
கம்பியானாள்

சிரிப்பு என்பது
அவளுக்கு
இதழில் இல்லை...
ஞாபகத்தில் இருக்கிறது.

முன்பெல்லாம்
ஆண்டாள் படிக்கச் சொன்ன
அப்பா
இன்று
பட்டினத்தாரும்
பரவாயில்லை என்கிறார்.

அந்த
சீதை சிந்திக்கிறாள்.
"இந்த வரதட்சனை வில்லை
வளைப்பது யார்?"

ராமர்களுக்கு இன்று
ரத்தமில்லை.

இனி
நாமே ஒடிப்பதே
நியாயம்.

காயத்திரி சிறிஸ்கந்தராஜா
இயற்கை விஞ்ஞான பீடம்
மட்டம் - 5

**The Facts of Life**

This is a story about
Four people named
Everybody, Somebody, Anybody & Nobody
There was an important job
To be done and
Every body was sure that
Some body would do it
Anybody could have done it,
But nobody did it
Somebody got tempered about that
Because it was everybody's job
Every body thought
Any body could do it
But nobody realized that every body wouldn't do it
It ended up that
Everybody blamed somebody
when nobody did, what
Any body could have done!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best compliments from*

## SAKTHYA CENTRE

**Stationer's & Fancy goods,**
**Gift Items Ecr.**

5/30, R. Super Market,
Kotahena,
Colombo - 13
Sri Lanka.
Tel: 2393103.

*With Best compliments from*

## TOUCH & TOUCH

*Where Fashion Begins*

118, Jampettah Street,
Colombo - 13
Sri Lanka.
Tel: 0714-814483.

*With Best compliments from*

## GOWRI JEWELLEAY

*Dealers in 22ct. Gold Jewellery*

**கௌரி ஜீவலரி**

5/29, Kotahena Super Market Complex,
Colombo - 13
Sri Lanka.
Tel: 343448, 338134

*With Best compliments from*

## HOTEL ANGEL

சலவிதமான சைவ அசைவ
உணவுகளை யாழ் முறைப்படி
பெற்றுக் கொள்ளலாம்.

40B Galle Road,
Colombo - 06
Sri Lanka.
Tel: 0112 554770

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best compliments from*

**SHAKTHI CAB**

Vehicle For Any Occasions

**5544244**

487/1/1, Galle Road, Wellawatte,
Colomo - 06
Tel: 5544244 / 5544599
Mobile: 077 3239044

*With Best compliments from*

**NATIONAL SALOON**

7, W.A Silva Mawatha,
Colombo - 06.
Tel: 2502329

*With best compliments from*

**APPOLO PHARMACY**

**Dealers in Pharmaceutical & Grocery Items**

No.317 C, Galle Road,
Wellawatte,
Colombo - 06
Tel:2505213

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியலுக்கில்லை தூரம்

விடியலை மட்டுமே
விடிய விடிய கனவு கண்டு
தூரங்களை எல்லாம்
துணிந்தே குறிபார்த்து - நிரந்தரத்
தூரமாகிப் போய்விட்டது விடியல்

நாற்காலிகளில் பாரமாகவே இருக்கும்
பருத்த உடல்களே
ஏன் இன்னும் உம்
ஏர்க்காலிகளை நிலத்தில் பதிக்கவில்லை
உழவுக்காக வயல்களெல்லாம்
புற்றரையாகவே இருக்கின்றன

வயல்மீது வெறுப்பா - அன்றி
உழவின் மீதுள்ள உறுத்தலா
இவை அனைத்துமின்றி
உங்கள் ஏர்க்காலின் கவனமோ

காக்கை எருது மீது ஏறி உட்காரும்
ஏன் எச்சம் கூட போடும்
நாக்கை நீட்டி எருதும் நுரைதள்ளும்
எதிரும் புதிருமாய் இழுக்கும்
காவிளான்களும் கோரைகளும் - இங்கேதான்
தடக்கி விழுத்தும்
காலநிலை உங்களை கடன் கேட்கும்
வெய்யிலடிக்கும், புயலடிக்கும் - ஏன்
மழையும் பெய்யும்

மண்ணை விட மனம்தான் கல்லாகும்
அஞ்சாமல் நீங்கள் இறங்கி வாருங்கள்
ஆறுதலாகவே நடை பயில்வோம்
உழவுசால்கள் எங்களுக்காக
குறைநிலையில் குவிந்துள்ளது - நாம்
ஏர் பிடித்தால் எமக்கு
எட்டாத தூரமில்லை
சுயநலத்தை நாம் விட்டால்
கிட்டாத விடிவு மில்லை.

கணணிகளில் கண்வைக்கும் - எம்
இளசுகளின் இதயங்கள்
பாலியல் விபரங்களை - தாம்
படிக்கலாம் என்று விட்டு
தமிழிலும் அவர்கள்
தடவித்தான் பார்க்கின்றனர்
Dot com க்கள் நல்ல துண்டா
நாங்களும் பார்க்க என்று
ஏங்கும் நெஞ்சங்கள்
ஏராளம் இங்குண்டு.

வானொலி முறுக்கியவர்
வகையான தமிழ் கேட்க
தானாக விரும்ப வில்லை
தாயவளும் விடவில்லை
தேனாக இனிக்குமிந்த
தெவிட்டாத தமிழதனை - மனம்
பேனாக கடிக்க வைக்கும்
பேயர்களின் உச்சரிப்பில் - காலம்
வீணாக்க விரும்பவில்லை
வீண் பேச்சும் தேவையில்லை

வெந்தணலில் வெகுமிந்த
செந்தமிழன் நிலை கண்டு
வந்து விடும் விடிவொன்று
வெகு விரையில் இந்த மண்ணில்

விடியலின் பிரசவத்திற்காய்
வீண்காலம் கழிக்கவில்லை
நான்கு ஆண்டுகள் -அவர்கள்
நன்றாகவே பொறுக்கின்றனர்
ஈர் ஐந்து மாதங்கள்
உண்மையான காலமென்றால் - ஏன்
குறைமாதப் பிரசவத்தில்
குதிரை ஏறி திரிகின்றனர்
நிறைமாதக் குழந்தையை
குறை மாதப் பிரசவத்தால்
குத்தி நீரும் கொன்றுவிட்டு - அவர்களை
குடை கூற உலகமெல்லாம்
குற்றுயிராய் துடிக்கின்றீர்

நிறைவாக ஒன்று வேண்டும்
நினைவிருக்க சொல்கின்றேன் - எம்
விடியலுக்கில்லை தூரம் - அங்கே
தெரியுது பார் அதன் வெளிச்சம்.

S.V.Kanthan.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எம் மனம் யாரிடத்தில்...

தென்றலாய் புயலாய்
தெவிட்டாத கானமாய்
வடிவங்களை மாற்றும் காற்றே
சொல்வாயா
என் மனம் யாரிடத்திலென்று?....

மண்ணின் தனித்துவத்திற்கு
வாழ்த்துத் தெரிவிக்க
வானம் சிந்தும்
நீர்த்தாரைகளின் ஒலியிலா?...

அதிகாலை நேரத்தின்
மெல்லிய இருள்
ஆதவின் அரவணைப்பில்
அர்த்தங்கள் பேச,
புல்மேல் நடமிடும் பனித்துளிகள்
நிசப்தமாக விரியும் மொட்டுக்கள்
தமைமறந்து கீச்சிடும் குருவிகள்
ஆஹா!
தன்னையே மறந்து
ஆத்மா ஆனந்தமடையும்
உலகத்தின் படைப்புகளிலா என்மனம்?...

உயிர் பிழிந்த உறவுகள்
உள்ளுக்குள் அம்பு தொடுக்க
விரக்தியே விடியலாய்
விஸ்வரூபம் பெற,
மணித்துளிகள் ஒவ்வொன்றும்
மரணத்திற்காய் விளிம்பில் கூட
ஜனனிக்க வைக்கும்
உன்னத நட்பின் சுவாசத்திலா?...

நேற்றய கனவுகள்
காற்றோடு கலந்து போக
விடியலைக் தேடித் தேடி
விழியோரம் ஈரமாக
வரையறைகள் கடந்து - என்
விடியலுக்காய் ஒளிர்ந்த
உன்னத உறவின் நெஞ்சத்திலா?...

உயிரிலே கலந்த
உடன் பிறந்த உறவுகளே!
ஊடல்கள் வந்தால்
இரவுகளின் நடுவே
உதடுகள் உச்சரிக்கும்
உங்கள் நாமம்!
தவறுகள் செய்து விட்டால்
தப்பித்து விட எண்ணுவதும்
பிடிபட்டு விட்டால்
வீண்வம்பு செய்து
விளையாட்டுக்கள் காட்டுவதும்
தினமொரு லீலைகள்
தினமொரு தேடல்கள்
எண்ணும் போதெல்லாம்
குதூகலிக்கும் - உங்கள்
அன்பின் ஆழத்திலா என்மனம்?....

வாழ்நாள் முழுவதும்
எம் வாழ்விற்காய் போராடி
மூச்சுக்கொரு தடவை
எம்முன்னேற்றத்துக்காய் சிந்தித்து
இதயத்திலிடம் கொடுத்த - எம்
பெற்றோர்களின் ஆழ்ந்த அன்பிலா?....

அம்மாவின் கருவரையிலிருந்து
எம் வாழ்வின் இறுதி எல்லை வரை
இணைபிரியாது பின்னிப்பிணைந்த
சகோதரர்களின்
செல்லக் கதைகளும், சின்னச் சின்ன
சேட்டைகளும்,
துன்பம் என்று வந்துவிட்டால்
துவண்டு விடுவதும்

இன்பமென்று வந்துவிட்டால்
எனக்காக விடும் ஆனந்தக் கண்ணீரும்,
இடையில் வரும் உறவுகளையே
தகர்த் தெறியும் வல்லமை கொண்டதும்
தினம் தினம் வேண்டிக் கொள்ளும்
இந்த ஆழ்ந்த அன்புச் சகோதர பாசத்திலா?...

உள்ளத்தின் உணர்வுகளை
வார்த்தைகளால் அசைபோட்டு
வாசிக்கும் உள்ளங்களை
யாசிக்க வைக்கும்
கருத்தூன்றிய "கவி" வரியிலா?...

தென்றலாய் புயலாய்
தெவிட்டாத கானகமாய்
வடிவங்களை மாற்றும் காற்றே
சொல்வாயே என்மனம் யாரிடத்திலென்று?...

ஜெனா வேதநாயகம
முகாமைத்துவப் பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from*

# UNIBROWN STEEL

124/B, Maha Vidyalaya Mw,
Colombo - 13, Sri Lanka.
Tel:232 5496, 242 3234, 245 8340
Fax: 534 0826

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from*



# ANGEL COMNET

**Internet cafe**
**Web Hosting**
**Web design**
**Graphic Dedign**
**Printing**
**Pc Reapearing**


#84, St' Joseph Street ,
Negombo,
Tel:031-2226470
Fax:031-2226480
Mob: 0776-218361

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதலனின் செய்கைகள், காதலியின் பார்வையில்

நீ அசிங்கமாக உடையணிந்தால் - அவள் உன்னை 'Play boy' யாக நினைப்பாள்
நீ அவள் உதட்டில் முத்தமிட்டாள் - அவள் உன்னை பைத்தியக்காரனாக நினைப்பாள்
நீ அவளை உதட்டில் முத்தமிடாவிட்டாள் - அவள் உன்னை ஆணாகவே மதிக்கமாட்டாள்
நீ அவளை புகழ்ந்தால் - அவள் உன் காதலை பிரகாசமாக மாற்றுவாள்
நீ அவளை புகழ்த்தவறினால் - அவள் உன் காதலை சந்தேகப்படுவாள்
நீ அவளுடன் நேசமுடன் பேசினால் - உன்னை அவள் அனுபவமுள்ளவனாக பார்ப்பாள்
நீ அவளை அடிக்கடி சந்தித்தால் - அவளுக்கு உன்மேல் ஈர்ப்பு ஏற்படும்
நீ அவளை எப்போதாவது சந்தித்தால் - அவள் உன்னைவிட்டு விலகவே நினைப்பாள்
நீ அவளை தவிர வேறு பெண்களுடன் கதைப்பதை அவள் பார்த்தால் - உன்னையும் உன்னுடனான காதலையும் முடித்துவிட நினைப்பாள்
நீ அவளை சந்திக்க தாமதமாக சென்றால் - உன்னுடன் பொய்க் கோபம் காட்டுவாள்
நீ சரியான நேரத்திற்கு சென்றால் - அவள் உன்னைகாக்க வைப்பாள்
நீ அவளை கணக்கெடுக்காமல் விட்டால் - அவள் உனக்காக ஏங்குவாள்.
நீ அவள் பின்னால் வழிந்தால் - அவள் உன்னை கணக்கெடுக்கமாட்டாள்.

சு. ஜெகவினோதன்
முகாமைத்துவ பீடம்



## சமாதானம் எங்கே

கறைபடிந்த பூமியில் புதையுண்ட சமாதானம் எங்கே
வழியிழந்தவன் முன் வெண்ணிலவாய்
அழுகுரல்கள் நிறைந்த பூமியில் அமைதியாக
சமாதானம் எங்கே
அரவணைப்பாளர் யாருமில்லா பூமியில்
அனாதையான சமாதானம் எங்கே
ஆயுத கலாசாரம் நிறைந்த பூமியில்
சமாதான சின்னமாய் வெண்புறா எங்கே
யுத்தம் நிறைந்த பூமியில் நீ விட்டு சென்றது
சமாதானம் என்னும் அனாதைகளையா - எங்கே
யுத்தம் நீ விட்டு சென்றது ஆயுள் கைதிகளையா!
அழுகுரல்களையா! - சமாதானம் எங்கே
விரைவில் நாம் தேடுவது உயிரிழப்புகளையல்ல!
உண்மையான சமாதானத்தை
உண்மையாய் உன்னை நேசிக்கிறேன்
விரைவில் அரவணைப்பாய் என்ற ஏக்கத்துடன்

ம.தர்மேந்தி
(முகாமைத்துவ பீடம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிட வாழ்க்கை

வாழ்க்கை ஒரு போர்களம் அதை போராடிவென்று காட்டுங்கள்
வாழ்க்கை ஒரு அரிய சந்தர்ப்பம் அதை நழுவவிடாது பயன்படுத்துங்கள்
வாழ்க்கை ஒரு கலை அதை அழகுபடுத்துங்கள்
வாழ்க்கை ஒரு விளையாட்டு அதில் பங்குபற்றுங்கள்
வாழ்க்கை ஒரு விடுகதை அதை விடுவியுங்கள்
வாழ்க்கை ஒரு போட்டி அதில் வெற்றி பெறுங்கள்
வாழ்க்கை ஒரு சவால் அதை துணிச்சல் உடன் எதிர் கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு சோகம் அதை கண்டு மனம் தளராதீர்கள்
வாழ்க்கை ஒரு பிரச்சினை அதற்கு சுமூகமா தீர்வு காணுங்கள்
வாழ்க்கை ஒரு வெகுமதி அதை இலாபமாக ஏற்று கொள்ளுங்கள்
வாழ்க்கை ஓர் நீண்ட பயணம் அதைசென்று முடியுங்கள்

S.N. திலகன்
பொறியியற் பீடம்

## மானிடம் பின்பற்ற வேண்டிய முக்கியமான மூன்று

மதிக்க வேண்டியது :- முதியோர், மார்க்கம், சட்டம்
நேசிக்க வேண்டியது:- நேர்மை, தூய்மை, கடின உழைப்பு
போற்ற வேண்டியது:- அறிவு, அழகு, பண்பு
பேணி வளர்க்க வேண்டியது :- திருப்தி, தைரியம், மனமகிழ்ச்சி
தவிர்க்க வேண்டியது:- மது அருந்துதல, சூதாட்டம், புகைத்தல்
அடக்க வேண்டியது:- நா, வேதனை, கோபம்
கட்டாயம் கவனிக்க வேண்டியது:- பேச்சு நடைமுறை, செயல்கள்
ஆதரிக்க வேண்டியது:- வாக்குறுதி, நட்பு, பண்பு
ஒழிக்க வேண்டியது:- திருட்டு, சோம்பல், பொய்
விரும்பவேண்டியது:- கருணை, நற்குணம், மனஅமைதி
வெறுக்கவேண்டியது:- பெருமை, அநீதி, வாக்குமீறல்
அஞ்சவேண்டியது:- களவு, கோள், பொய்
போரிட வேண்டியது:- தேசம், கண்ணியம், நட்பு
எதிர்கொள்ள வேண்டியது:- கவலை, பயணம், மரணம்

தொகுப்பு:- S.N.திலகன்
பொறியற் பீடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from*

**WESTERN UNION**
**MONEY TRASFER**

**FedEX**
**EXPRESS**

# Dial Com

**Agency Post Office &**
**Communication Bureau**
#5/30, Kotahena Super Market,
Colombo - 13 Sri Lanka.
Tel: 2432207 - 5369390.
Fax: 94-11-2436095
E-Mail: dialcom@lankabellnet.com

**Communication Bureau &**
**Secretaial Services**
#763, Bloemendhal Road,
Colombo - 15 Sri Lanka.
Tel: 5353358 - 9, 5353936
Fax: 94-11-2523209

# KINGSTON COLLEGE INTERNATIONAL

**Wellawatte Branch**
40,8 Dharmarama Road,
Wellawatte
Colombo - 06.
Sri Lanka.
Tel: 011 2582497
E-mail: kingston@dialogsl.net

**Mutwal Branch**
84, De La Salle Road,
Mutwal,
Colombo - 15.
Tel: 011 2527111


**MT. Lavinia Branch**
31, Samudrasanna Road,
Mt. Lavinia
Tel : 011 4204047

**Mathale Branch**
Sri Madura Gradens
573/1, Main Street,
Matale
Tel: 066-2230229

6/6, Upali Place,
Vihara Road,
Matale
Tel: 066 222 4382


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from*



# Classic Tailors

## Expert in Gents Tailors

73A, Sea Street ,
Negombo, Sri Lanka.
Tel:031-2233934
Mob:0773213353

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from*

**Roopams Silks (Pvt) Ltd**

Specialist in Wedding Sarees

507, Galle Road, Colombo - 06
Tel: 4513172, 2362208
Fax: 236 1620
E-mail: info@roopamssilks.com
web: www.roopamsskilks.com

WHOLESALE AND RETAIL DEALERS IN TEXTILE

***With Best compliments from***

**SAKTHIY COMMUNICATION**

**Local, IDD calls, Internet Calls, Photocopy**
**Fax, Internet and E-mail**
**Laminating,Typesetting,Etc**

36, Station Road, Colombo 6
Tel: 250 7565
2507567
Fax: 250 7568
E-mail sakthiycomm@yahoo.co.uk

***With Best compliments from***

**WebCare Systems**

*Leading E-solution Company*

296, 7th Floor,
Galle Road,
Colombo 6
Tel: +94 11 2360755,
Mobile: 077 7173791
e-mail: info@webcaresys.net
web: www.webcaresys.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INFONETS
## *Cyber cafe*

**128 Kbs Speed Net surfing**

**Cheap Rates Local Call**

**Quality Internet Call**

**&**

**All Other Computer related
Works under one roof**

**Station Road,
Vavuniya.
Tel : 024 2224309**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஞ்சநேயர் வழிபாடும் அதன் சிறப்புக்களும்

இந்து மதமானது ஆதியும் அந்தமும் இல்லாத இறைவனாம் சிவபெருமானை முழுமுதற் கடவுளைக் கொண்டது. அதர்மத்தை அழிக்கவும் தர்மத்தைக் காக்கவும் இறைவானனவர் யுகங்கள் தோறும் அவதாரம் எடுப்பது நாம் அறிந்த உண்மை. இறைவனை பல திருநாமங்கள் சொல்லியும், பல உருவங்கள் கொடுத்து வழிபடுவது இந்துமத மரபாகும். 21ம் நூற்றாண்டில் ஆஞ்சநேயர் வழிபாடு இந்து மதத்தவரிடையே அதிகரித்துக் காணப்படுகின்றது. இன்று ஈழத்திருநாட்டில் ஆஞ்சநேயருக்கு என்று பல கோயில்கள் கட்டப்பட்டுள்ளன.

சுமேரு மலையை ஆண்ட கேசரி என்ற வானர அரசனின் மகளான அஞ்சனாதேவி புத்திரவரம் வேண்டிக் கடுந்தவம் புரிந்தாள். அதன் பயனாக அஞ்சனையின் மகனாக ஆஞ்சநேயர் திரு அவதாரம் செய்தார். வானரப் பெண்ணின் மகனாகப் பிறந்த ஆஞ்சநேயர் வானரர்களிற்கு உரிய குறும்புச் செயல்களைச் செய்தார். சூரியனைப் பழம் என்று எண்ணி அதைப் பிடிக்க விண்ணில் தாவினார். இதைக் கண்ட சூரியன் இந்திரனிடம் முறையிட இந்திரன் தன் வஜ்ராயுதத்தைப் பிரயோகிக்க முகம் மாற்றமடைந்தது.

சூரியனே தனக்கு ஏற்ற குரு எனக் கருதிய ஆஞ்சனேயர் சூரியனை தனது குருவாக ஏற்றுக் கொண்டார். முனிவர்களின் சாபத்தினால் தன்நிலை மறந்த ஆஞ்சநேயர் சாந்தமாக மாறினார். அனுமனை வீட்டில் வைத்து வணங்கக் கூடாது என்ற தவறான எண்ணக்கருத்து நிலவி வருகின்றது. இதற்குக் காரணம் அவர் கடுமையான பிரமச்சாரி என்று நினைக்கின்றனர். உண்மையில் மற்றைய கடவுளைவிட அன்பும், அறமும், மன்னிக்கும் ஆற்றல், கருணை உள்ளம் உடையவர் ராமன் சீதை பிரிவுத்துயரை நீக்கிவைத்தவர், இல்லறத்துக்கு துணைபுரிபவர்.

ஆஞ்சநேயரின் மூச்சுக் காற்றுக்கூட "இராம ஜெயம்" என்று கூறும் அளவிற்கு இராமனிடம் பக்தி கொண்டவர். ஆஞ்சநேயரை வழிபடுபவர்களுக்கு புத்தி, பலம், புகழ், உறுதிப்பாடு, அஞ்சாநெஞ்சம், ஆரோக்கியம், வாக்குவன்மை, இரக்கம், கருணை, அமைதி, அடக்கம், வெல்லமுடியாத ஆற்றல், சேவை மனப்பான்மை என்பன கிடைக்கும்.

மகாசக்திமானாக இருக்கும் ஆஞ்சநேயர் அவை அத்தனையும் இராமன் போட்ட பிச்சை என அடக்கமாகக் கூறுகின்றார். இராமன் திருவடிகளே ஆஞ்சநேயரின் சரணாலயம். மந்திரம், தந்திரம், யந்திரம், அஸ்திர உபாயங்களிற்குக் கட்டுப்படாத புண்ணிய புருசனாகக் காணப்படுகின்றார். ஸ்ரீராம கீர்த்தனையாலும், உண்மையான பக்தியால்மட்டுமே இவரை உபாசிக்க முடியும் இவரது உபாசனை மிகவும் கடினமானது ஐம்புலன்களையும் அடக்கி மனதை ஒருநிலைப்படுத்தி "ஸ்ரீராமஜெயம்" சொல்லி உபாசிக்கலாம். இவரை எல்லாதினங்களிலும் வழிபடலாம். எனினும் புதன், வியாழன், சனிக்கிழமைகள் உகந்தவை. வியாழக்கிழமைகளில் வெறிலை மாலை சாத்திவழிபடலாம். மார்கழி மாத்தில் மூலநட்சத்திரத்தோடு வரும் அமாவசையில் அனுமன் அவதரித்த நாளாகும். ஆஞ்சநேயரை வழிபடுபவர்களுக்கு சனிதோஷம் பறந்துவிடும்.

அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றை தாவி
அஞ்சிலே ஒன்று ஆறாக ஆரியர்க்காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அனங்கைக் கண்டு அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவன் எம்மை அளித்துக் காப்பான்

பஞ்சபூதங்களும் அனுமாருக்கு கட்டுப்பட்டது மூன்று யுகங்களிற்கும் சிரஞ்சீவியாக வாழும் ஒருவர் ஆஞ்சநேயரே.

இராமாயணத்தில் சுந்தர காண்டத்தில் அனுமனின் சிறப்புக்கள் கூறப்பட்டுள்ளது. பிறவி காரணமாக கொண்டுள்ள உடம்பைச்சுருக்குதலும் விஸ்வரூபம் எடுத்தலும் மனிதனின் சக்திக் அப்பாற்பட்டது.

பிரம்ம கல்பத்திலே பிரம்மாவாகி இறையருள் பெறும் வரத்தைப் பெற்றவர். சஞ்சீவி மலையை சுமந்துவந்து உயிர்களை காப்பாற்றியவர். "கண்டேன் சீதையை" என்று சொல்லி ஸ்ரீராமனது துக்கத்தை துடைக்கின்றார். இப்படிப்பட்ட ஆஞ்சநேயரை நாமும் வழிபட்ட நன்மை பெறுவோமாக!

"ஸ்ரீராம ஜெயம்"

தி.பிரதிபரா
இயற்கை விஞ்ஞானபீடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## FEATURES OF C++ PROGRAMMING LANGUAGE

C++ 25 one of the object oriented programming (OOP) language. It build upon the solid foundation of C language C++ has become universal language of computer programmers around the world. C++ will create the next generation of high performance software. C ++ was invented in 1979 by Bjarne Stroustrup at Bell

OOP programming 25 powerful way to approach the task of programming. All oop Languages, including C++ share three common defining traits: Encapsulation. Polymorphism and inheritance. Encapsulation 25 the mechanism that binds together code and the data it manipulates, and keeps both safe from outside interface and misuse. In other words on object 25 the device that supports encapsulation. polymorphism 25 the quality that allows one name to be used for two or more related but technically different purpose. The concept of polymorphism 25 Characterized by the idea of "one interface, multiple methods. Which means using a generic interface for a group of related activities. INHERITANCE 25 the process by which one object can acquire the properties of another. Inheritance 25 important because it allows an object to support the concept o hierarchical classification. Most information 25 made manageable by hierarchical classification.

The headers supported by standard C++ (eg:-<iostream>, <fstreams): In order to use C++ Input / out put operators, you must include the header <20stream> 2 in your program. In c++; Input / output is performed

<< operator.
Cout << expression:

In general to input values from the keyboard use this form of >> operator.
Cin>> Variable

you can add a remark to your C++ program is to use the single – line comment. A single –line comment begins with a // and stops at the end of line .
eg: // see if even or odd
    // private to my class.

Perhaps the single most important feature of C++ is the class. The class 25 the mechanism that is used to create objects. A class is declared using the class keyword. The object list is optional general form of class declaration.

```
Class        Class name
{
// Private functions and variables
public:
}
//Public functions and variables
object-list
```

and pervasive C++ feature is function over loading. Two or more functions share the same name. They are said to be overloaded. C++ supports all of the keywords defined by C language and include additional 30 of its own.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

generates the call.

C++ provides a safer and more convenient way to allocate and free memory. In C++ you can allocate memory using new and release it using delete. The feature is called the default argument, and it allows you to give a parameter a default value when no corresponding argument is specified when the function is called. The default arguments must be constants or global Variables. They cannot be local variables or other parameters.

The majorr advantage of the C++ I/O system is that it can be overloaded relative to classes that you create. Put differently, the C++ I/O system allows you to seamlessly integrate new types that you create. A stream is linked to a physical device by the C++ I/O system. To perform file I/O you must include the header <fstream> in you program.

create a virtual function precedes the functions declaration with the keyword Virtual. Virtual functions are hierarchical in order of inheritance.

C++ is most important high-level features templates and exception handling using templates it is possible to create generic functions and classed. Exception handling is the subsystem of C++ that allows you to handle errors that occur at run time in a structured and controlled manner. This is automatically invoke an error

during the execution of your program. The casting operators give you safer. more controlled ways to cast. The map class supports an associative container in which unique keys are mapped with values.

The C++ is contain most important features in the OOP programming language. There are several aspects of C++ that allow greater flexibility in the way that you write programs.

**ABBREVIATION**

(Sort form of word)

1. IEEE - Institute Of Electrical And Electronic Engineers
2. ACM - Association For Computing Machinery
3. PPAM - Professional And Public Affairs Board
4. ISM - Industry Structure Model
5. ELITE - Effective Leadership In Information Technology.
6. SFIA - Skills Framework For The Information Age.
7. ETMG - Education And Training Management
8. IRMG- Information Resource Management
9. EC - Engineering Council
10. CEI - Council Of Engineering Institutions
11. MBO - Management By Objectives
12. HSC - Health And Safety Commission
13. HSE - Health And Safety Executive

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 14. | SDA | - | Sex Discrimination Act. |
| 15. | RRA | - | Race Relations Act |
| 16. | DDA | - | Disability Discrimination Act. |
| 17. | IPR | - | Intellectual Property Rights. |
| 18. | CMA | - | Computer Misuse Act |
| 19. | IRC | - | Internet Relay Chat |
| 20. | HTTP | - | Hyper Text Transfer Protocol |
| 21. | PAP | - | Pretty Good Privacy |
| 22. | HRP | - | Human Resource Planning |
| 23. | RST | - | Repetitive Strain Injuries |
| 24. | EEO | - | Equal Employment Opportunity |
| 25. | HTML | - | Hyper Text Mark-Up Language |
| 26. | RIMM | - | Rambus Inline Memory Module. |
| 27. | MAR | - | Memory Address Register |
| 28. | MBR | - | Memory Buffer Register |
| 29. | CNR | - | Communication Netware Riser |
| 30. | AGP | - | Accelerated Graphics Port |

N.T.P. Para
Natural science

# Qualities of a good language Learner

The good language learner: will....................

1. Be able to respond to the group dyramies of the learning situation so as not to develop negative anxiety and inhibition.
2. Seek out all opportunities to use the target language
3. Make maximum use of opportunities afforded to practice listening to and responding to speech in the L-2 addressed to him and to others-this will involve attending to meaning rather than to form.
4. Supplement the learning that derives from direct contact with speakers of L-2 with learning derived from the use of study techniques.
5. be an adolescent or an adult rather than young child. At least as far as the early stages of grammatical development are concerned.
6. Posses sufficient analytic and see the original store the linguistic features of L2 and also to monitor errors.
7. Posses a strong reason for learning the L2. and also develop a strong "Task Motivation"
8. Be prepared to experiment by taking risks, even if this makes the learner appear foolish.
9. Be capable of adapting to different learning conditions.

   (L-2 – 2nd Language)

N.T.P. Para
Natural science

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from*

# *Metal Traders*

Importers, General Hardware Merchants

31-2/9, Quarry Road,
Colombo - 12, Sri Lanka.
Tel:0094-11-2434280, 2336580,
Fax: 0094-11-2336247
e-mail:metal@eureka.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

இம் மருதமலர் சிறப்பாக வெளிவருவதற்கு வாழ்த்துச்செய்திகள் தந்துதவிய எமது பல்கலைக்கழக துணைவேந்தர், பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், மாணவர்ஒன்றித்தாருக்கும் மற்றும் ஆசிச்செய்திகள் வழங்கிய சமயப் பெரியார்களுக்கும், ஆக்கங்கள் தந்துதவிய சகல மாணவர்களுக்கும் மற்றும் விளம்பர அனுசரணை வழங்கிய அனைத்து நிறுவனங்களுக்கும் மற்றும் இந்நூல் சிறப்பாக அமைய ஆலோசனை வழங்கிய அனைவருக்கும் மற்றும் இம் மலரை சிறப்பாகவும் துரிதமாகவும் உருவமைத்து தந்த "கனவுநிலையம்" நிறுவனத்தாருக்கும் மற்றும் பல்வேறு வகையிலும் நேசக்கரம் நீட்டி உதவி புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும், இணையத்தளத்தில் பொங்கல் தொடர்பாக உலாவ விட்ட சிரேஷ்ட மாணவர்களுக்கும் இலங்கை திறந்த பல்கலைக்கழக பொங்கல்விழா ஒருங்கமைப்பு குழு சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி

இங்ஙனம்
தைத்திருநாள் விழா ஒருங்கமைப்புக் குழு,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Aero Lanka




**HEAD OFFICE**
500, Galle Road,
Wellawatte
Colombo-06
Tel: 250 5632
Fax: 250 0626

**BRANCH**
295, Jampettah Street
Colombo-13
Tel: 243 0782
Fax: 243 0782

**JAFFNA OFFICE**
86, Point Petro Road,
Jaffna
Tel: 021-222 6242
Fax: 021-222 5600

**TRINCO OFFICE**
47, Kandy Road,
Trincomalee
Tel: 026-222 1519
Fax: 021-222 1519

SERENDIB MINI CABS






## 2361261, 2361262, 2361263

# Serendib Mini Cabs

Head Office: 500, Galle Road, Colombo 6
Tel: 011 555 7744-9, Fax: 94 -11 250 0626


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Printed by: **Dream Station** 255 9789

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org